விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 13 திங்கட்கிழமை (29.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

ஆகஸ்ட் 10ஆம் திகதி

## பொது அமைப்புகளுடன் தமிழ் மக்கள் பேரவை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற் பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேர ணிக்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்யும் வகையில், எதிர்வரும் ஆகஸ்ட் ▷23



உடுப்பிட்டியில்

## மாணவன் சடலமாக மீட்பு

(கரணவாய்)

உடுப்பிட்டி இலந்தைக்காடு பகுதியில் பாடசாலை மாண வன் ஒருவன் சடலமாக ▷23

## திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு 85 அடி தூரத்தில் அமைய வேண்டும்

மக்களுடனான சந்திப்பில் தீர்மானம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு பிரதேச சபை வழங்கிய சந்தியிலிருந்து 85 அடி தூரத்தில்தான் அமைக்கப்பட வேண்டும் என்று மக்களுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து கருத்துக்கள் பொதுமக்களிடம் கேட்டறியும் கூட் டம் திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபை ▷23

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில்

நீதிமன்றை நாடும் ஜனாதிபதி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர் பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் வாரமள வில், உயர்நீதிமன்றத் தின் வியாக்கியானத்தை ▷23

## நெல்லியடியில் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி நெல்லியடிப் பகுதி யில் இரண்டு கிலோகிராம் கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் இரு வர் கைது செய்யப்பட்ட தாக விசேட அதிரடிப் ▷23

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளி

# அரச ஒத்தோடிகளாக கூட்டமைப்பு மாறிவிட்டது

நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு


(கிளிநொச்சி)

**தமிழ் மக்களின் உணர்வுகளை புறந்தள்ளி அரச ஒத்தோடி களாக கூட்டமைப்பு மாறிவிட்டது என நீதியரசர் விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.**

**மேலும் எமது மக்கள் தமது விரல்களாலேயே தங்களது கண்களைக் குத்திக் கொண்டுள்ளதை இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியுள்ளார்கள் எனவும் சுட்டிக் காட்டினார்.**

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'சமாதானத்திற்கான யுத்தம்' என்கின்ற பெயரில் உலக வல்லரசுகளின் ஆதர வோடு எம் மண்ணில் எமது மக்கள் ▷23




## நீரில் மூழ்கி யாழ். இளைஞன் சுவிஸில் மரணம்



▷23

## இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட சர்வதேசத்துக்கு எவ்வித உரிமையும் கிடையாது

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கை அரசியல் மற்றும் உள்விவகாரங்களில் தலையிட சர்வதேசத்துக்கு எந்த உரிமையும் இல்லை என எதிர்க்கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

தங்காலையில் உள்ள தனது வீட்டில் நேற்று நடைபெற்ற கருத் தரங்கொன்றிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

நாட்டின் ஒழுக்கத்தை பாது காக்க முடிந்த தலைவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும். இல்லை என்றால் நாடும், இன மும் அழிந்து போகும். கடந்த தேர் தலில் என்னை தோற்கடிக்க வெளிநாடுகள் பணியாற்றின. இம் முறை வெளிநாடுகள் செயற்பாடுகளை முன் ▷23

## தம்பசிட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மரணம் தற்கொலையே

பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு

(கரணவாய்)

கைகள் பின்புறமாக கட்டப்பட்டும் கழுத்து பஞ்சாபி சோலினால் இறுக்கி சுற்றப்பட்ட நிலையில் கிணற்றில் இருந்து சடல மாக மீட்கப்பட்ட இளம் ▷23

மக்களின் பெரும்பான்மை ஆதரவு கிடைத்தால்

## நாட்டின் அபிவிருத்திகள் பன்மடங்காக அதிகரிக்கும்

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு பொது மக்களினால் பெரும் ▷23

வரலாற்று சிறப்புமிக்க மாவைக் கந்தனின்

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்ட புரம் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 45 அடி உயரம் கொண்ட சித்திரத் தேர் வெள் ளோட்டம் சிறப்பாக ▷23

## பிரேமதாச வழியில் செல்ல வேண்டாம்

சஜித்துக்கு மகிந்த அறிவுரை

(தங்காலை)

சஜித் என்ற அரசியல் இளை ஞன் தனது தந்தையின் வழியில் செல்ல வேண்டாம் என கூறிக் கொள்ள விரும்புவதாக எதிர்க்கட் சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை கோல்டன் இல்லத் தில் நேற்று இடம்பெற்ற ▷23

## தமிழர்கள் இன்று கல்முனையை கேட்பது யுத்தம் புரிவதற்கா?

அதாவுல்லாஹ் கேள்வி

(அம்பாறை)

தமிழர்கள் கல்முனை பிரதேச செயலகம் கேட்கிறார் கள். ஆனால் தமிழ் ▷04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2019

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம் 21.07.2019 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யுள்ளது. 30.07.2019ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தேர்த்திரு விழாவும் 31.07.2019 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடை பெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தரு வதுடன் ஆடி அமாவாசை விரத அடியார்கள் சங்கற்பித்து தர்ப்பணம் செய்து விரத அனுட்டானங்களை மேற்கொள்ளலாம் என் பதையும் அறியத் தருகின்றோம்.

தர்மகர்த்தாக்கள்,
பரிபாலன சபையினர்,
புளியம்பொக்கனை.

(C-9135)

## தொழில் முயற்சி தொழில் வாய்ப்பு

இம்முறை A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே!

உங்கள் படிப்பின் பின்னரான காலப்பகுதியில் Certificate உடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்கி அதன் மூலம் தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்தி தரப்படும்.

- O/L படித்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
- தொழிற் பயிற்சிக்காக கோரப்படும் மாவட்டங்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா)

தொடர்புகளுக்கு : 076 719 4867

(9742)

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலியில் உள்ள மருத்துவ உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றுக்கு பணியாளர் தேவை.
(40 வயதுக்கு உட்பட்டவர்கள்)

தொடர்புகளுக்கு

077 125 8025

(9731)

## ஐ.தே.கவுடன் இணைவர் - ரவி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சிலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்வார்கள். அதற்கான இரு தரப்பு கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் உரிய நேரத்தில் எங்களுடன் இணைந்து கொள்ளப்போகும் சுதந்திரக் கட்சி உறுப்பனர்கள் யார் என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## மீண்டும் மகிந்த யுகம் எழுக!

வரலாற்றில் 30 வருட கால யுத்தத்தை நிறுத்தி மக்களை நிம்மதியாக வாழ வழி வகுத்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான திரு.நாமல் ராஜபக்ஷவை வருக வருகவென வரவேற்கின்றோம்.





ந.திரிலோகநாதன்
வலி.மேற்கு பிரதேசசபை
முன்னாள் தலைவர்,
முக்கியஸ்தர்
ஸ்ரீலங்காபொதுஜன பெரமுன

(C-7133)

வ.சிவநாதன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்,
மானிப்பாய் தொகுதி அமைப்பாளர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

# பணிநயப்பும் பணிவரவேற்பு விழா வாழ்த்துக்களும்

### 29.07.2019

எமது கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் 02.07.2012 தொடக்கம் அதிபராக சேவையாற்றி 14.02.2019 திகதியன்று யா/விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அதிபராக மாற்றம் பெற்ற ஸ்ரீமான் பொன்னையா அரவிந்தன் அவர்களின் பணிநயப்பும் எமது பாடசாலைக்கு புதிய அதிபராக 04.04.2019 தொடக்கம் கடமை பெற்று வருகை தந்து பணியாற்றுகின்ற அதிபருக்கு வரவேற்பு உபசார விழா வாழ்த்துக்கள்.




ஸ்ரீமான் பொன்னையா
அரவிந்தன்
(BSc.Dip.inEd,M.Ed,DP Edm.g, SLPS II)
யா/விக்கினேஸ்வராக் கல்லூரி - அதிபர்

## பணிநயப்பு வாழ்த்துப்பாக்கள்

அரம் போலும் கூர்ந்த மதி நுட்பம் வாய்ந்தோன்
ஐவகைக் கல்வித்தூண்களையும் ஆராய்ந்திங்கு
மரம் போல வாழாது தன் கருமம் அனைத்துடன் கல்லூரி
ஆசிரியர்களுடன் மாணக்கர் அனைவரையும் வாழ்விலூக்கஞ் செய்த
சிரம் போலு சால்பு பெறத் தேன்போல் கல்விப்பணிகள்
கீர்த்தி பெறு பொன்னையா அரவிந்தன் அதிபரே
தரம் பேணுமறுவில்லா பணிநயந்து உங்களுக்குத்
தனிவிழா! தமிழ் கலவன் கற்கோவளம் வாழ்த்துதுமே!

தாறு செய் தவதானங்கள் புரிந்துலகோர் மெச்சும்
நுண்மதியான் அரவிந்தன் அதிபரே நீடு வாழி!
உறுவரு புலமை பல நூறுவகையணிகள் செய்து
குலவு புகழ் கல்லூரிக்குத் தேசியம் செல்வாய்ப்புக்
காணுறு வண்ணம் கவின் விளையாட்டுப் பணிகள் பல
வுண்மைகள் உணர்ந்திடச் செய் பணிவாழ்கவே
தேறவரும் மாணக்கர் தெளிவு பெறு ஆசிரியக் குழாங்களுடன்
குன்றின் பெருதீபமெனப் புகுந்திறலோன் கீர்த்தி வாழ்க.

*இன்றையதினம் (29.07.2019) பணிநயந்து நனிவியர்ந்து உங்கள் பணி மேன்மேலும் உயர்ந்து வாழ அதிபர் ஆசிரியர்களுடன்பாடசாலை கற்கோவளம் மெ.மி.த. கவின் வாழ்த்துக்கள்.*
சுபம்.



ஸ்ரீமான் செல்லையா
ஜெயமோகன்
(BSc.Dip.inEd, M.Ed, SLPS II)
யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை - அதிபர்

## வரவேற்பு வாழ்த்துக்கள்

ஓங்குந் தியாகச் சிந்தையுடன் ஒளியேற்றிடு அதிபரே வருக!
ஒடுக்குஞ் சிறுவர் நலம் பேண உள்ளம் மகிழ்ந்தே வருக!
நீங்கில் நல்லெண்ணத் தேசம் புகழ் பணிபுரிய இனிதே வருக!
செம்மையுறும் தலைவா அறிவுப் பசி தீர்க்க இனிதே வருக!
நீங்கும் அகம் அன்பு அதிகாரம். வெளிப்படை எண்ணம் வெல்க!
வித்தக மைந்தா செல்லையா ஜெயமோகன் அதிபரே வருக!
தேங்கும் வளம் சேர்க்க கற்கோவளம் மெ.மி.த. சிறக்க வருக!
அரும்பணி, ஆக்கம், துணை வலி, அரவணைப்புடன் ஓங்கவே வருக!


### இங்ஙனம் வரவேற்கும் : -

யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்விசாராபணியாளர்கள், பாடசாலை சமூகம் சார்பாக : சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மேற்படி பாடசாலை பகுதித்தலைவர், ஆதீன ஹர்த்தா நெல்லண்டை பத்ரகாளி அம்மன், ஸ்ரீ வீரகாளியம்மன், வட பத்திரகாளியம்மன் தேவஸ்தானம் தும்பளை.
நெல்லண்டை, பருத்தித்துறை.

(9739)

# புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை

## ஜயம்பதி விக்ரமரத்ன அதிருப்தி



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக நிபுணர் குழுவின் அறிக்கை அரசியலமைப்பு பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என வழிநடத்தல் குழு உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டு இரண்டு நாள் விவாதம் நடைபெற்ற நிலையில் இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஜயம்பதி விக்ரமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் அறிக்கை 2017 செப்டெம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. அதே நேரத்தில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை 2019 ஜனவரியில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் வழிநடத்தல் குழு இறுதியாக 2019 ஜனவரியிலும் அரசியலமைப்பு பேரவை இறுதியாக 11.01.2019 அன்று கூடி இருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர், ஜயம்பதி "அனைத்து நகர்வுகளும் சரியான திசையில் சென்றிருக்குமாயின், நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசியலமைப்பு பேரவையில் விவாதம் நடைபெற்றிருக்கும் விவாதத்தைத் தொடர்ந்து, புதிய அரசியலமைப்பின் வரைவை உருவாக்கி அதை முன்வைப்பது வழிநடத்தல் குழுவின் முக்கிய பணியாக இருந்திருக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நான்கு மாவட்டங்களின் வெற்றியே நாட்டின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும்

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் கொழும்பு வாழ் மக்களே தீர்மானிப்பார்கள் என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மேலும் இந்த நான்கு மாவட்டங்களிலும் வெற்றி பெறும் நபரே நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பொறுப்பேற்பார் என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல்தான் தற்போது எமக்கு இருக்கும் ஒரே துருப்பாக காணப்படுகிறது. இதனை நாம் இம்முறையும் தவற விடுவோமானால் நிச்சயமாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்காகவும் மன்னிப்புக் கூறவேண்டும்.

இந்த வெற்றி எமக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகவே கருதப்படுகிறது. இதற்காக நாம் ஆயத்தமாகிக் கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எமக்கு கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் வாக்குகள் 5 வீதத்தால் குறைவடைந்தன.

ஆனால், இதனால் நாம் தோல்வியடையவில்லை. மாறாக கம்பஹா, குருநாகல் மாவட்டங்களில் குறைவான வாக்குகளை பெற்ற காரணத்தினாலேயே நாம் தோல்வியடைந்திருந்தோம்.

இலங்கை வரலாற்றை எடுத்துக்கொண்டால், கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் கொழும்பில் ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவாராயின், அவர்தான் அடுத்த ஜனாதிபதியாக நாட்டை ஆட்சி செய்வார்.

எனவே, எமது தற்போதைய இலக்கு இந்த மாவட்டங்களில் விசேடமாக வெற்றி பெறவேண்டும் என்பதை நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

உங்கள் மனநிலை
யாருடனாவது பேசவேண்டும்
போல இருந்தால், தயங்காமல் எம்மை
அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.
எமது அமைப்பில் மதமும், அரசியலும் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. ரகசியம் பேணுவோம்.
கை கொடுக்கும் நண்பர்கள்
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)
077 900 8776 ( தினமும் மு.ப 9.00 - பி.ப. 1.00 )
(9738)

# துப்பாக்கிச் சூட்டில் சாரதி உயிரிழப்பு!

(கொழும்பு)

கொழும்பு, கொஹுவலை ஜம்புகஸ்முல்லா மாவத்தையில் ஜீப் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சாரதி உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இடம் பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூட்டுக் கிலக்கான இருவரும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் (களுபோவில) அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போதே மேற்படி ஜீப் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


யாழ்ப்பாணத்தில்
1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்
உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்
1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை
40 - 60 தேக்கு
20 கஜூ மரம்
10 - 15 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
28 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை
80 - 90 தேக்கு
40 கஜூ மரம்
20 - 30 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
53 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)
அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
30 அடி, 20அடி, 15 அடி அகல பாதை
விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
24 மணிநேர பாதுகாப்பு
விளைபொருட்களுக்கான சந்தை வசதி
பொதுவான வசதிகள்
பொது விடுதி | உணவகம் | செயற்கை மழைத் தடாகம் | விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை | மீன்பிடி குளம் | முந்திரிகை தோட்டம் | மூலிகைத் தோட்டம்
5 வருட பராமரிப்பு இயற்கை வழியில்
100% ORGANIC

சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்
078 284 5000
021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
(C-7132)

# தொடரை வென்றது இலங்கை

பங்களாதேசுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவிஷ்கா பெர்ணான்டோ அரைசதம் கடந்து கைகொடுக்க இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை, 2-0 எனக் கைப்பற்றி முன்னிலை பெற்றது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டி கொழும்பில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் தமிம் இக்பால், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**முஷ்பிகுர் அரைச்சதம்**

பங்களாதேஷ் அணிக்கு சவுமியா சர்கார் (11), கேப்டன் தமிம் இக்பால் (19) ஏமாற்றினர். அகிலா தனஞ்செய 'சுழலில்' மொஹமட் மிதுன் (12), மகதுல்லா (6) சிக்கினர். சபிர் ரஹ்மான் (11), மொசாதக் ஹொசைன் (13) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய முஷ்பிகுர், அரைசதம் கடந்தார். மெஹிதி ஹசன் (43) ஓரளவு கைகொடுத்தார். பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில், 8 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்கள் எடுத்தது. முஷ்பிகுர் (98), முஸ்தபிஜுர் ரஹ்மான் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**அவிஷ்கா அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய




இலங்கை அணிக்கு அணித் தலைவர் திமுத் கருணாரத்ன (15) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அபாரமாக ஆடிய அவிஷ்க பெர்ணான்டோ (82), அரைசதம் கடந்து கைகொடுத்தார். குசால் பெரேரா (30) ஆறுதல் கொடுத்தார். பின் இணைந்து மத்யூஸ், குசல் மெண்டிஸ் ஜோடி பொறுப்பாக ஆடியது. சபிர் ரஹ்மான் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய மத்யூஸ் அரைசதம் கடந்து, அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இலங்கை அணி 44.4 ஓவர்களில், 3 விக்கெட்டுக்கு 242 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. குசல் மெண்டிஸ் (41), மத்யூஸ் (52) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## தமிழர்கள் இன்று..

மக்களுக்கு தேவை பிரதேச சபை. அவர்கள் அதைக் கேட்கவில்லை என தேசிய காங்கிரஸ் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தேசிய காங்கிரஸின் கல்முனை மாநகர சபை புதிய உறுப்பினராக தெரிவாகிய சப்றாஸ் மன்சூர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 8 மணியளவில் கல்முனை பிரதான வீதி நகர மண்டபத்திற்கு அருகாமையில் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது கருத்தில்,

தமிழர்கள் கல்முனை பிரதேச செயலகம் தான் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு தேவை பிரதேச சபை. அவர்கள் அதைக் கேட்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், கோடீஸ்வரன் இருக்கின்ற சபையிலே நான் பகிரங்கமாக தெரிவித்தேன்.

கல்முனையில் நான்கு உள்ளூராட்சி சபை உருவாக்கப்பட வேண்டும் என்று அதனை சம்பந்தன் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை.

ஆனால் இன்று தமிழர்கள் வீட்டு கூரைக்கு மேலாக எல்லையை கேட்பது யுத் தம் புரிவதற்கா என்ற கேள்வி எங்கள் மத்தியில் எழுகின்றது. கோடுகள் போடுவது நிர்வாகத்திற்கு மாத்திரமே. அதைவிடுத்து எங்களை நாங்களே பயங்கரவாதிகளாக மாற்றுவதற்கு அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என தனதுரையில் கூறினார்.(ம-3)

## பிரேமதாச வழி...

அவருக்கும் அதே கதிதான். தயவு செய்து அவரது தந்தையின் வழியில் செல்ல வேண்டாம் என்று அந்த இளைஞனுக்கு கூறிக்கொள்ள விரும்புவதாக மகிந்த அறிவுரை வழங்கியுள்ளார். (ம-3)

**Luxmy Building Construction**

தரமான கட்டிட அமைப்புக்கள் உங்கள் விருப்பம்போல குறைந்த செலவில், குறித்த காலத்தில் செய்து வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு 0774366704
0770658515

**தேவை**

தச்சு வேலை பூரணமாகத் தெரிந்த ஒருவர் கோப்பாய் பகுதியில் உள்ள இயங்கிய பட்டடைக்கு தேவை.

தொடர்பு: 0774366704

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 30 - 09 - 1959

இறப்பு 28 - 07 - 2019

எமது திணைக்களத்தில் பணி புரியும் வடிவேலு நிரோசன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**பரமசாமி வடிவேலு**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்க சமூகம்
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.

பழைமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**வேலையாட்கள் தேவை**

நெல்லியடி நகரிலுள்ள வர்த்தக மற்றும் சேவை நிறுவனங்களில் பணிபுரிவதற்கு வேலையாட்கள் தேவை

1. குளிர்பான நிலையம் (கிறீம் ஹவுஸ்) இரண்டு ஆண் பணியாளர்கள் தேவை தங்கி நிற்கும் வசதியும் உண்டு
உரிமையாளர்: 077 377 3197

2. அச்சகம் & றபர்சீல் தொழிலகம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை வேலை பழகி செய்ய விரும்புவோரும் வரலாம்
உரிமையாளர்: 077 914 3171

3. அழகு நிலையம் ஒன்றிற்கு பெண் பராமரிப்பாளர் தேவை மற்றும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பாளர்: 077 968 5660

# மரண அறிவித்தல்

## திருமதி கிருபாலினி ஜெகநாதகுரு

**(பிரதான முகாமைத்துவ உதவியாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம்- யாழ்ப்பாணம்)**

*மலர்வு: 1984.02.01*

*உதிர்வு: 2019.07.27*



*கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாலினி ஜெகநாதகுரு அவர்கள் 27.07.2019 அன்று அகால மரணம் அடைந்து விட்டார்.*

*அன்னார் ஸ்ரீஸ்கந்தராசா - சாந்தாதேவி தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற விஸ்வநாதக்குருக்கள் - கோமேதவல்லி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஜெகநாதகுரு (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) அவர்களின் பாசமிகு மனைவியும், ஸ்ரீதவச்செல்வனின் பாசமிகு சகோதரியும், சுபாசினியின் பாசமிகு மைத்துனியும் சுபக்சனின் பாசமிகு மாமியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2019) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.*


*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(C-7141)

கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி.

தகவல்: குடும்பத்தினர்
0775834572

# ஆலயங்கள் எம் இந்துமக்களின் பொக்கிஷங்கள்



## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**ஆலயங்கள் எம் இந்துமக்களின் பொக்கிஷங்கள். அவை நினைத்தால் எம் மக்களை உன்னத நிலைக்குக் கொண்டு போக முடியும் என்றும் ஆன்மீகம் சார், அறிவு சார், கலை சார், தொழில் சார் நடவடிக்கைகளை நடத்தி சுற்றியிருக்கும் சமூக நிலையை மேம்படுத்த முடியும் என்றும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ்மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.**

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி கண்ணகை அம்பாள் திருக்கோவில் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆனைக்கோட்டை உயரப்புலம் கண்ணகை அம்பாள் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்று முடிவடைந்த மஹோற்சவ நிகழ்வுகளின் போது இந்து இளைஞர் மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட அறநெறி மற்றும் சைவசமய வினாவிடைப் போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு பரிசு வழங்கும் இந்நிகழ்வில் உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

சைவத் தமிழ் மக்களிடையே ஒரு ஊரின் சிறப்பு அவ்வூரில் அமைந்துள்ள ஆலயத்தின் சிறப்பை வைத்தே மதிப்பீடு செய்யப்படுகின்றது.

"கோயில் இல்லா ஊர் பாழ்" என்பான் தமிழன்.

அந்தவகையில் ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி ஆலயம் இந்த ஊருக்கு அணிகலனாக விளங்குகின்றது.

1986 ஆம் ஆண்டில் கண்ணகி அம்பாளை மூலமூர்த்தியாக பிரதிஷ்டைசெய்து ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தில் அலங்கார உற்சவங்களே நடைபெற்று வந்த நிலையில் இவ்வாலயத்தை முழுமை பெறச்செய்யும் நோக்கோடு அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி திருவுருவத்தை மூலமூர்த்தியாக பிரதிஷ்டை செய்து கொடியேற்றத்துடன் கூடிய மஹோற்சவ நிகழ்வுகள் வருடாவருடம் முன்னெடுத்து வரப்படுகின்றன என்று அறிகின்றேன்.

ஆதிகாலத்தில் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்றும் கூறிவந்தார்கள் எம் முன்னோர்கள்.

அக்காலத்தில் வழிப்போக்கர்களும் ஞானிகளும் துறவிகளும் ஒரு ஊரின் எல்லையை அடைகின்ற போது அவ்வூர் ஆலயத்தின் கோபுரம் கண்ணுக்கு புலப்படின் அவர்கள் எதுவித சலனமும் இன்றி அவ்வாலயத்திற்குச் சென்று அங்குள்ள திருக்குளத்தில் நீராடி அவ்வாலயத்தைத் தரிசித்து அன்னதான மண்டபத்தில் உணவுண்டு சற்றுநேரம் ஓய்வெடுத்து தமது பயணத்தை தொடர்வார்கள்.

அக்காலத்தில் ஆலயங்கள் அனைத்திலும் அன்னதான நிகழ்வுகள் இடையறாது நடைபெற்றன. இடையில் சிலகாலம் இந்த நிகழ்வுகள் மழுங்கியிருந்தபோதும் தற்போது மீளவும் அன்னதான நிகழ்வுகளை இளைஞர் கழகங்கள் முன்னின்று நடத்தி வருவது மனத்திற்கு மகிழ்வைத் தருகின்றது.

ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு நம்பிக்கையிலேயே தனது வாழ்வைத் தொடர்கின்றான்.

அந்த நம்பிக்கை இறை நம்பிக்கையாக மிளிர்கின்றபோது அவ் வாழ்வு பயனுள்ளதாக அமைகின்றது.

இன்றைய இளைஞர்கள் இறை நம்பிக்கையுடையவர் களாக ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டு மற்றும் அறநெறி வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்து சிறுவர், சிறுமியர்களையும் இறை நம்பிக்கையுடைய ஒருவாழ்வுக்கு தயார்படுத்தி வருவது மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

ஆலயக் கட்டடங்களை அமைத்து ஆறுகாலப் பூஜைகளை ஒழுங்காக நடத்துவதுடன் மட்டும் தமது பணி நிறைவடைந்ததாக எமது ஆலய தர்மகர்த்தாக்கள் எண்ணக்கூடாது.

கோயில்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுதல் அவசியமாகும். வெறுமனே கட்டடங்களை உடைத்து உடைத்துக்கட்டி இறைவனுக்கு அலங்காரங்கள் செய்வதால் மட்டும் அருளாசி கிடைத்து விடாது. ஆலயங்களுக்கு நிதிகளை வாரி வழங்குகின்ற பண்பு இயல்பாகவே எமது மக்களிடம் காணப்படுகின்றது. இவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற நிதிகள் ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் செலவு செய்யப்படவேண்டும். தங்கம்மா அப்பாக்குட்டி அவர் களின் செயற்பாட்டை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி அம்மன் தேவஸ்தான நிதிகளில் பெரும்பாலானவை சமுதாயப் பணிகளுக்கே அவர் காலத்தில் செலவு செய்யப்பட்டது.

இப்பொழுது நண்பர் ஆறு. திருமுருகன் அவர்களும் அவ் வழியே தான் செல்கின்றார் என்று நம்புகின்றேன்.

எமது பண்டைய கோயில்கள் கலை, கலாசாரம் விருத்தியடையவும் அன்னதானம், அறிவு பகிர்தல் போன்றவை நடைபெறவும் உதவின.

வருங்காலத்தில் எமது கோயில்களும் கலைக் கூடங்களாக, கல்விக் கூடங்களாக மாற வேண்டும்.

சமூகத்தின் வழிகாட்டிகளாக விளங்கக்கூடிய படித்த இளைஞர் குழாம் சமயப் பணிகளில் ஈடுபட முயல்வது வரவேற்பிற்குரியது. வளர்ந்தவர்களை நெறிப்படுத்துவதை விட குழந்தைகளை இறை பக்தியுடன் வாழக்கூடிய ஒரு எதிர்கால சந்ததியாக மாற்ற முயல்வது சிறப்பிற்குரியது. ஏனைய மதங்களில் அவர்களின் வழிபாட்டுத் தலங்களில் உறுப்பினர்களுக்கான கட்டுப்பாடுகளையும் நெறிப்படுத்தல்களையும் ஆலயங்களே வழங்குகின்றன.

குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு நான் விஜயம் செய்தபோது அக்கிராமத்தில் உள்ள அனைத்து ஆண்,பெண்களும் பண்ணோடு இசைபாடக்கூடிய திறமையைக் கொண்டிருந்ததை அவதானித்தேன். இந்தவிடயம் பற்றி வினவிய போது அவ்வூர் ஆலயத்தின் சிறப்புப் பற்றியும் அந்த ஆலயத்தின் பிரதம குருக்கள் மற்றும் பரிபாலனசபையின் தன்னலமற்ற பணிகளைப் பற்றியும் அறிந்து கொண்டேன். "ஆலயங்கள் எம் இந்து மக்களின் பொக்கிஷங்கள். அவை நினைத்தால் எம் மக்களை உன்னத நிலைக்குக் கொண்டு போகமுடியும். ஆன்மீகம் சார், அறிவுசார்,கலைசார்,தொழில் சார் நடவடிக்கைகளை நடத்தி சுற்றியிருக்கும் சமூக நிலைமை அவர்கள் மேம்படுத்தமுடியும்"

இவ்வாலயத்தில் இயங்கு கின்ற இந்து இளைஞர் மன்றம் மிகவும் விழிப்புடன் செயலாற்றுகின்றது என அறிகின்றேன். "நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோர்" என்ற மகுட வாசகத்தை தமதாக்கிக் கொண்டு கலை,கலாசாரம் மற்றும் சமயப் பணி ஆகிய துறைகளில் முனைப்புடன் செயலாற்றுவதுடன் சிறு பராயத்தவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்குசெய்து பரிசில்களையும் வழங்குவது ஏனைய இளைஞர் மன்றங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகஅமைகின்றது.

'பரம் பொருளின் பெரும் புகழைப் பாடிப்பணிதல் அன்றி வேறொன்றும் பேசற்க ஆலயத்துள்' என்ற வாசகத்திற்கமைய ஆலயத்தில் நடைபெறுகின்ற இந்நிகழ்வில் எமது அரசியல் முன்னெடுப்புக்கள் பற்றிப் பேசுவது எமது எதிர்ப்பார்ப்புக்களை நாமே விஞ்சியதாக அமைந்துவிடும்.

எனவே,எமது அரசியல் பயணம் பற்றி பிறிதோர் சந்தர்ப்பத்தில் இங்குள்ள இளைஞர் குழாமுடன் பேச முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**29.07.2019**

ஆடி 13, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

துவாதசி பிற்பகல் 2.42 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 4.45 மணிவரை

சுபநேரம் 12.03-1.33 மணிவரை

இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை: புத, ராகு, சந் | சூரி, செவ் சுக் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்

**மேடம்:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைத்து மகிழ்வீர்கள், பகை யொன்று நட்பாகலாம், செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவுனர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானம் அதிகரிக்க முற்படுவீர்கள், பதவி உயர்வுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் கான வேண்டிய நாள் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், ஏட்டிக்கு போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் பென்னான செய்திகள் வந்து சேரலாம்.



வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரகம், காவடி, கோலாட்டம் , மயிலாட் டம், மீனவ நடனம் ஆகியவற்றுடனான பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சர்வமத குருமாரின் ஆசியுடன் மண்டபத்தில் பல்வேறு கலை நிகழ்வுகளும் நாடகமும் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பும் இடம்பெற்றது. இலக்கியம், நாட்டியம், நாடகம், நாட்டுக்கூத்து, மேடையமைப்பு மற்றும் ஒப்பனைத்துறை சார்ந்த எட்டு மூத்த கலைஞர்கள் யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் 'யாழ். ரத்னா' விருதும் இளங்கலைஞர்களுக்கு விருதுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் "யாழ்பாடி" கலாசார மலரும் வெளியீடு இடம்பெற்றது.

## நிறுவுநர் தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நிறுவுநர் தினமும் பெற்றோர் தின நிகழ்வும் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அதிபர் சோ.கிருஸ்ணா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் ச.ரவி, உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.மாதவன், கௌரவ விருந்தினர்களாக யா/வயாவிளான் றோ.க.த.க.பாடசாலை ஆசிரியர் திருமதி.வ.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## சின்னம் சூட்டல்

(குருநகர்)

யா/ குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.கனியுகன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தேவகுமாரன், சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி சி.ஜஸ்ரின் அடிகளார், கௌரவ விருந்தினராக ஜே/69 கிராம உத்தியோகத்தர் குருதர்ஷன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-106)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவர் பொலிஸாரால் கைது

(கொடிகாமம்)

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் ஒன்றினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வரணி நாவற்காடு பகுதிக்கும் வடக்கு காடு பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றுள்ளது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டு பளை பிரதேசத்தை நோக்கி சென்ற போது பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த டிப்பரை வழி மறித்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன் பளை பிரதேசத்தைச் சேர்ந்த வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் இருவரையும் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(5-114)

## வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவு புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் **(Sticker)** என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பிரதி ஆணையாளர் வை.பரந்தாமன் அறிவித்துள்ளார். (5)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் நடைபெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். தொடர்ந்து 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொது மக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி ஆலய காம்யோற்சவப் பெருவிழாவில் நாளை செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் (முக உத்தர திருத்தேர்), நாளை மறுதினம் ஆடி அமாவாசைத் தீர்த்தமும் இடம் பெறவுள்ளன. (5)




## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி தெற்கு வயாவிளான் வரப்புலம் அருள் மிகு ஸ்ரீ தான்தோன்றிப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமநாதன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் "சைவதத்துவம்" எனும் தலைப்பிலும் நாளை செவ்வாய்க்கிழமை 6.30 மணிக்கு "ஐந்தொழில் தத்துவம்" எனும் தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (5)

## வைத்தியசாலை வளாகத்துள் வருபவர்கள் தங்க ஆபரணம் அணிவதைத்தவிர்க்கவும்

### வைத்திய அத்தியட்சகர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தினுள் வருகை தரும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் தங்க ஆபரணங்கள் அணிவதையும் கைப்பையில் கொண்டு வருவல்தயும் தவிர்த்துக் கொள்ளுமாறு சாவகச்சேரி வைத்திய அத்தியட்சகர் தயாளினி மகேந்திரன் பொது மக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த வாரம் காணாமல் போன தங்க ஆபரணம் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த வைத்தியசாலைக்கு வருகை தரும் அனைவரும் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதையும் கைப்பையில் கொண்டு வருவதையும் தவிர்த்துக் கொள்வதோடு மீறி அவ்வாறு கொண்டு வரும் நிலை ஏற்பட்டால் அவர்களுடைய தங்க ஆபரணம் தொடர்பில் உரியவர்களே பொறுப்பாளிகளாக இருக்க வேண்டும் எனவும் தினசரி அதிகளவானோர் வருகை தரும் வைத்தியசாலையில் இனிமேல் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றால் வைத்தியசாலை நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்புக் கூற மாட்டாது எனவும் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (5-10)

## அண்ணாவின் உருவச்சிலை விஷமிகளால் உடைப்பு




(கரணவாய்)

சனசமூக நிலையம் முன்னால் வைக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணாவின் உருவச் சிலையின் கை ஒன்று விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

கரணவாய் அண்ண்ாசிலையடிப் பகுதி வள்ளுவர் சனசமூக வாசலில் வைக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணாவின் உருவச் சிலைகளில் ஒன்றின் கை விசமிகளால் உடைக்கப்படுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவே இவ் உருவச்சிலையின் கை உடைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.(5-60)

## சனசமூக நிலைய வைரவிழா

(கொடிகாமம்)

கைதடி மத்தி சனசமூக நிலையத்தின் வைரவிழா நிகழ்வு நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய தலைவர் இ.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/289 சமுர்த்தி உத்தியோகத்தர் கு.கிஷோக், ஜே/292 சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி சு.தயாளினி, உலக வறுமை ஒழிப்பு நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி மு. அகிலன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் ஆசிரியரும் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான செ.பிரதாப், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழக தலைவர் க.ஸ்ரீதரன்,கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

## "சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் திருட்டுத்தனமாக கைச்சாத்து"

# கப்பலில் வந்த கழிவுகளால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

## வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டிற்குள் கப்பல் மூலம் கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட கழிவுப்பொருட்களில் மருத்துவக் கழிவுகள் காணப்படின் அது பாரிய ஆபத்தை தோற்றுவிக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே எச்சரித்தார்.

சுங்கத்திணைக்களம் சுற்றாடல் பாதுகாப்பு சுகாதார நடவடிக்கைகளில் அக்கறை செலுத்தத் தவறியுள்ளது எனவும் அவர் குற்றம்சாட்டினார். இந்தக் கழிவுப் பொருட்களால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்க அதிகாரியொருவரை நியமிக்குமாறும் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள கழிவுப்பொருட்களில் மருத்துவக்கழிவுகள் மற்றும் உடல் பாகங்களும் காணப்படுவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சத்திரசிகிச்சை கழிவுகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டு கழிவுகள் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது பாரிய சர்ச்சை மூண்டுள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் மருத்துவக் கழிவுகளும் இருப்பதாக தகவல்கள் வெளிவருகின்றன.

எனவே, இது தொடர்பில் உரிய தரப்பினர் தகுந்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவ்வாறான மருத்துவக் கழிவுகள் காணப்படின் அது மிகவும்ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். அதனை சாதாரணமான விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

கொண்டுவரப்பட்ட கழிவுப் பொருட்கள் தற்போது துறைமுகத்தில் கொள்கலன்களிலிருந்து வெளியில் அகற்றிய நிலையிலேயேகாணப்படுகின்றன. வெயில், மழை போன்றவற்றால் மேலும் அவை சேதமாவதுடன் சுற்றுச்சூழலுக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய நிலை காணப்படுகின் றது.

இதனால் புற்றுநோய் , சுவாசப்பிரச்சினை மற்றும் வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. இது தொடர்பில் சுங்கத்திணைக்களம் அதீத கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஆனாலும், இது தொடர்பில் தகுந்த சுகாதார நடைமுறைகள் சுங்கத்திணைக்களத்தில் இல்லை. இவ்வாறான கழிவுப்பொருட்களால் சுங்கத்திணைக்களத்தில் தொழில் புரிவோருக்கும் பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய ஆபத்து காணப்படுகின்றன.

எனவே, சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு சுங்கத்திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டுள்ளோம். அரசாங்கம் நாட்டுக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்த கூடிய சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் திருட்டுத்தனமாக கைச்சாத்திட்டது.


அதன்விளைவாகவே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட அமைப்புக்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

சுங்கத்திணைக்களத்தின் தரவுகளின் படி 241 கழிவுப் பொருட் கொள்கலன்கள் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில்130 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் எஞ்சிய 111 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன்.

இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இந்தப் பிரச்சினையை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். 2013 ஜூலை 13ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைச் சுட்டிக்காட்டி கடந்த அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்டுகின்றனர். இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எனவே , ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தருவதுடன், அவர் சுற்றாடல் அமைச்சர் என்பதால் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (இ-7)

# தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து



(இங்கிரிய)

இங்கிரிய பகுதியிலுள்ள பிரதான தூரிகை உற்பத்தி தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து இடம் பெற்றது. நேற்றுக் காலை 9 மணியளவில் இந்தத் தீ விபத்து இடம் பெற்றது. தீ தொழிற்சாலை முழுவதும் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


# மணிவிழா வாழ்த்து

திருமதி
இராஜகமலா சிவகாந்தன்



சேவைக்காலம்: 1990.03.26-2019.07.29

2010.09.13 தொடக்கம் இன்றுவரை எமது வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பதில் அதிபராகவும் சேவையாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி இராஜகமலா சிவகாந்தன் அவர்களை வாழ்த்துவதில் வித்தியாலயச் சமூகம் பெருமை கொள்கின்றது.

best wishes

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.
யா/மயிலிட்டி வடக்கு கலைமகள்
மகா வித்தியாலயம், காங்கேசன்துறை.


# பருத்தித்துறை நகர சபை பெறுகை அறிவித்தல்-2019

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (முத்திரைத்தீர்வை) PSDG (SD) - 2019

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02 தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதிய 04/2016 (I) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட பெறுகை தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டிய படி வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகர சபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்: 021 226 3213) மேலதிக தகவல்களையும் பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

06. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 2019.07.29 ஆம் திகதி தொடக்கம் 2019.08.15 ஆம் திகதி பி.ப 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 2340/= (VAT,NBT உட்பட) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபை, பருத்தித்தறை எனும் முகவரிக்கு 2019.08.16 ஆம் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைநேரம் முடிவடைந்த உடனே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.

08. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்தேழு (77) நாட்கள் (2019.11.01) வரையும் செல்லுபடியாகும்.

09. பெறுகை தொடர்பான முதற்கூட்டம் பருத்தித்துறை நகர சபை அலுவலகத்தில் 2019.08.08 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பெருவெட்டி வீதி புனரமைத்தல் (தார்) | 2.726 Mn | 2 மாதங்கள் | PSDG (SD) 2019 | C8/C7 | 27500.00 | 15.11.2019 |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.

(C-7125)

# புராதன பிரதேசங்களைப் பாதுகாக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமுமில்லை

## மேர்வின் சில்வா சீற்றம்



(கெகிராவ)

சஹ்ரானின் ஆக்கிரமிப்பை விடவும் மிகப் பெரிய ஆக்கிரமிப்பை முஸ்லிம் நபர் ஒருவர் மேற்கொண்டுள்ளதாகவும், அந்த நபர் தன் முன்வந்திருந்தால் மரத்தில் கட்டி வைத்திருப்பேன் எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

கெகிராவ, கலாவெவ, விஜித புர பிரதேசத்தில் புராதன சின்னங்கள் உள்ள பிரதேசத்தை, பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு அழித்து அங்கு மா மற்றும் தென்னை மரங்களை நாட்டியுள்ளதாக கூறப்படும் இடத்தை நேற்று முன்தினம் மாலை மேர்வின் சில்வா நேரில் சென்று பார்வையிட்டார். இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

புராதன பிரதேசங்களை பாதுகாப்பதற்கான எந்தவொரு வேலைத் திட்டமும் அரசாங்கத்திடமும், எதிர்க்கட்சியினரிடமும் இல்லை. இதனாலேயே இவ்வாறு நடைபெறுகின்றது.

நான் வருவதை கேள்வியுற்று இந்த சேதத்தை விளைவித்தவர் தலைமறைவாகியுள்ளார். அவர் இந்த இடத்தில் இருந்திருந்தால் மரத்தில் கட்டியிருப்பேன். இந்த காணியை ஒரு சிங்களவர் தான் எடுத்துள்ளார். இதன் பின்னர்தான் சஹ்ரானின் பரம்பரையில் உள்ள முஸ்லிம் ஒருவர் எடுத்துள்ளார். நான் அந்தப் பேய்க்கும் சொல்கின்றேன். இன்று சிறையில் இருப்பது சிறந்தது. இங்கு இருந்திருந்தால் மரத்தில் கட்டிவிட்டுத் தான் நான் சென்றிருப்பேன்.

அடுத்த முறை நான் இந்தப் பிரதேசத்துக்கு வரும்போது இது போன்ற வேலையை செய்து கொண்டிருப்பின், செய்ய வேண்டிய வேலையை செய்து பொலிஸில் ஒப்படைப்பேன் எனவும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)



(கேலிச்சித்திரம்)

# தென்மராட்சி வரணியிலுள்ள ஆலயத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

(கொடிகாமம்)

யாழ்.தென்மராட்சி வரணிலுள்ள ஆலயம் ஒன்றில் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வரணி கரம்பைக்குறிச்சி கிழக்கு ஆழ்வார் மடம் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வாலயத்திலிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாக கொடிகாமம்பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் கிணற்றிற்கு அருகாமையில் சிறிய கட்டடம் ஒன்றில் பாதுகாப்பாக பொருத்தப் பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடுவதற்காக அந்த கட்டடத்தை உடைத்து இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வரணிப்பகுதியிலுள்ள ஆலயங்களில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் தொடர்ச்சியாக திருட்டுப் போகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5-114)

# பனைசார் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு அரசால் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## சபைத் தலைவர் இராசேந்திரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு-செலவுத் திட்ட உரைக்கமைய விசேட கருத்திட்டத்தின் கீழ், பனைசார் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தி, சிறந்த சந்தை வாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சால் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆ.ந.இராசேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

யாழ்.மாவட்டத்தில், காரைநகர், அச்சுவேலி, சாவகச்சேரி, கோப்பாய், பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய பனை , தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பதநீர் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி, கள் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி, பதநீருக்குரிய சுண்ணாம்பு உற்பத்திப் பொறித் தொகுதி, பனைவெல்ல உற்பத்திப் பொறித் தொகுதி மற்றும் பனைவெல்ல கட்டட நிர்மாணித்தல் என்பவற்றுக்காக ரூபா 35.60 மில்லியனும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, பூநகரி, பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போத்தலில் கள் அடைக்கும் பொறித் தொகுதி, பனை வெல்ல உற்பத்திப் பொறித் தொகுதி என்பவற்றுக்காக ரூபா 24.00 மில்லியனும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, முல்லை.கிழக்கு, துணுக்காய்/ பாண்டியன்குளம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போத்தலில் கள்அடைக்கும்பொறித் தொகுதி, அரைத்தல்,பைகளில் இடல், பொதி செய்தல்,பொறித் தொகுதி என்பவற்றுக்காக ரூபா 20.80 மில்லியனும், மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம், மன்னார் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கள் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி, பதநீர் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி என்பவற்றுக்காக ரூபா 16.00 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் அமைந்துள்ள 14 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்காக பனை அபிவிருத்திச் சபையால் பனைசார் உற்பத்தி கருத்திட்ட முன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கங்களும் அமையப் பெற்ற மாவட்டச் செயலகங்கள் ஊடாக, நிதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

| மாவட்டம் | ப.தெ.வள.அ.கூ.சங்கம் | திட்டம் | நிதி ஒதுக்கீடு (Mn) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | அச்சுவேலி | பனை வெல்லம் உற்பத்தி செய்யும் பொறித் தொகுதி | 11.00 |
| | | பனை வெல்லம் உற்பத்தி நிலையம் நிர்மாணித்தல் | 3.00 |
| | கோப்பாய் | பதநீர் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி | 3.80 |
| | காரைநகர் | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | பண்டத்தரிப்பு | பதநீர் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | மானிப்பாய் | பனை வெல்லம் உற்பத்தி செய்யும் பொறித் தொகுதி (Boiler system) | 2.00 |
| | சாவகச்சேரி | பதநீருக்குரிய சுண்ணாம்பு உற்பத்திப் பொறித்தொகுதி | 0.60 |
| கிளிநொச்சி | பூநகரி | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | கிளிநொச்சி | பனைவெல்லம் உற்பத்தி செய்யும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | பளை | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | அரைத்தல் பைகளில் இடல், பொதி செய்தல் பொறித் தொகுதி | 4.80 |
| | துணுக்காய் / பாண்டியன்குளம் | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | முல்லை. கிழக்கு | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| மன்னார் | உயிலங்குளம் | கள் போத்தலில் அடைக்கும் நவீன பொறித் தொகுதி | 8.00 |
| | மன்னார் | பதநீர் போத்தலில் அடைக்கும் பொறித் தொகுதி | 8.00 |

# பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும் - திகா



(கண்டி)

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமும் பங்கேற்றலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், மக்களிடையே மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமாக இருந்தால் பெண்கள் அதிகமாக அரசியலில் கால் பதிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மக்களின் கஷ்டங்களும் ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் தெரியும் என்பதால், பெண்களில் அதிகமானோர் அரசியலில் களமிறங்கினால் மாற்றத்தை உருவாக்க முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

### கட்சித் தலைவராக மகிந்த

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய நிறுத்தப்படுவது உறுதி

### சண்டே ரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

**பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்தப்படுவது உறுதியாகிவிட்டது என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டது.**

ஒகஸ்ட் 11 ஆம் திகதி இடம் பெறும் கட்சியின் மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வார் எனவும் அதன் பின்னர் அவர் அநேகமாக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பார் எனவும் சண்டே ரைம்ஸ் தெரிவித்தது.



இந்தச் சந்திப்பிற்கு முதல்நாள் பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைவர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ தனது முடிவை தெரிவிப்பார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை சிங்கப்பூரிலிருந்து மருத்துவசிகிச்சையின் பின்னர் நாடு திரும்பினார்.

அவரை வரவேற்பதற்கான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாமலிருப்பதை உறுதி செய்ய மகிந்த ராஜபக்ஷ விரும்பினார்.

இன்னமும் கோத்தபாய குறித்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியாகாததன் காரணமாகவே அவரது வருகைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படும் நிகழ்வை பெருமளவில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் கோத்தபாய ராஜபக்ஷவை களனி விகாரைக்குப் பேரணியாக அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டது.

அதன் பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவை அநுராதபுரம் மகாபோதி விகாரைக்கு வாகனப்பேரணியாக அழைத்துச் செல்வதற்கான திட்டங்களும் உள்ளன. அதன் பின்னர் அவர் கண்டிக்கும்செல்வார் என சண்டே ரைம்ஸ் தெரிவித்தது. (இ-7)

# ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளராக புகழ்பெற்ற அரச அதிகாரி-ஹேரத் தகவல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் புகழ்பெற்ற அரச சேவை அதிகாரியொருவராக இருக்கலாம் என அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

அந்த வேட்பாளர் யார் என்பது குறித்து அடுத்த மாதம் நடுப்பகுதியில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி முன்னணி எனும் கூட்டணி சார்பிலேயே இந்த வேட்பாளர் நிறுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டணியில் புத்திஜீவிகள், கலைஞர்கள், சிவில் அமைப்புக்கள், பல்துறை அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் பிரதம பிரதி இராஜாங்க செயலாளராக நியமனம்

(வோஷிங்டன்)

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் பிரதம பிரதி இராஜாங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கிழக்காசிய மற்றும் பசுபிக் விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் பிரதம பிரதிச் செயலாளராக அவர் பணியாற்றுவார். அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதுல் கெஷாப் தனது 25 வருடகால அமெரிக்க இராஜதந்திர சேவையில் இந்தியா. மொரோக்கோ. கினியா மற்றும் இலங்கை. மாலைதீவுக்கான தூதுவராகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குறை'களை' பதிகம் 72

### ஆடி அமாவாசை விரதம்

# கீரிமலை கடற்கரை கல்லகற்றி நலம் பெறுமா?



எண்சாண் உடம்பிற்கு
சென்னி சிறந்ததென்பார்
ஈழத்து ஈச்சரங்களின்
சிரசாய் விளங்கும்
கீரிமலை நகுலேச்சரத்தானின்
திருவடி பணிந்தால் - நம்
தீராத வினையெல்லாம் தீருமன்றோ

கீரி முகங் கொண்ட முனிவர்
தன் கீரிமுகம் அகலவேண்டி
கீரிமலை நகுலேச்சரத்தானின்
தீர்த்தமதில் நீராடி வணங்க
அவர் கீரிமுகம் நீங்கி
மனித முகம் வந்ததாய்
வரலாறு சொல்கிறது

பித்ருதேவோ பவ என
உபநிடதங்களில் போற்றும்
ஆடி அமாவாசை விரதம்தனை
புனித பூமியாம் கீரிமலையில்
புனிதமாக நிறைவேற்ற
கோடான கோடி பக்தர் கூடுவர்

பிண்டம் வைத்து ஓமம் வளர்த்து
பிதிர்களை சாந்தப்படுத்தும்
இப் புனித நாளில்
புனித கங்கையில் நீராடும் பக்தர்க்கு
உபாதை கொடுக்கவல்ல
கடற்கற்களை அகற்றி
மணல் பரப்பி மாண்புடன்
செயற்படுவீரோ!
வலி.வடக்கு பிரதேச சபையினர்க்கு
இது சமர்ப்பணம்

கடந்த காலங்களில்
பிதிர்க்கடன் முடிக்கவந்த பக்தர்
கடற்கரை சுற்களிடையே விழுந்தெழும்பிய
காட்சி கண்டு பலமாகக் கண்டித்தோம்
கண்டுகொண்டீரோ, காணாது விட்டீரோ!

இருந்தும் உம்மிடம் மீண்டும்
ஒரு விண்ணப்பம்
நாளை மறுதினம் நடக்கும்
ஆடி அமாவாசை விரதத்தில்
பங்கு கொள்ளும் பக்தர்க்கு
இடர்தரா வண்ணம் செயற்படுக...

சைவர்களின் விரதங்களில்
முதன்மையான ஆடி அமாவாசைதனில்
பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கினால்
பெரும் பேறு கிடைக்கும்
கௌரவ ஆளுநரே
இது உங்களின் கவனத்திற்கு...

மாவை.நா.கஜேந்திரன்

# முல்லை. அம்பலப்பெருமாள்குளம் விவசாய கிராமத்தில் உவர் நீராக மாறும் நன்னீர் கிணறுகள்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் உவர் பரம்பல் ஏற்பட்டு வருவதன் காரணமாக நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறி வருவதுடன், மரங்கள் அழிவடைந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் தற்போது 110 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயத்தினை மட்டும் நம்பி இக் கிராமத்தில் குடும்பங்கள் வாழ்கின்றன. இந்நிலையில் கிராமத்தின் உவர்ப் பரம்பல் எதிர்காலத்தில் விவசாயத்தினை அழித்து விடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் காணப்படுகின்ற அம்பலப் பெருமாள் குளம், அம்பலவன்சின்னக்கட்டுக்குளம் என்பன கிராமத்தின் விவசாய முயற்சிகளுக்கு உயிர் நாடியாக உள்ளன. 2009ஆம் ஆண்டில் இருந்து உவர்ப் பரம்பல் தொடர்பாக கிராம விவசாயிகளினால் அதிகாரிகளுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம் என்பன அம்பலப்பெருமாள்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஏற்பட்டுள்ள உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கு தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதும் மண் பரிசோதனைகள் இடம் பெற்று அதன் முடிவுகள் தெரியப்படுத்தப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

## குடிநீர் பிரச்சினையை தீர்க்கக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழையமுறிகண்டிக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொதுக் கிணறு ஒன்றினை தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிணறுகளின் நீர் மட்டம் குறைவடைந்ததன் காரணமாக கிராம மக்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். பழைய முறிகண்டிக் குளத்தின் கீழ்ப் பகுதியில் பொதுக் கிணறு ஒன்று உள்ளது. குறித்த கிணற்றினை இறைத்துத் துப்புரவு செய்வதற்கு துணுக்காய் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

## துணுக்காயிலுள்ள அரைக்குமாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் ஆனது ஒரு விவசாய மாவட்டம் ஆகும். இங்கே பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே பிரதான ஜீவனோபாய தொழிலாக கொண்டிருப்பதோடு பாரிய அளவு பிரதேசத்தில் நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைய மூன்று நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் வரட்சி காரணமாக மக்களுடைய நெற்செய்கைகள் பாரியளவில் பாதிக்கப்பட்டாலும் எஞ்சுகின்ற நெற்செய்கை மூலம் கிடைக்கின்ற நெல்லினை கூட உரிய விலையில் விற்பனை செய்ய முடியாதவாறு பாரிய இடர்பாட்டுக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் நெல் அறுவடையின் போது உரிய நேரத்தில் உரிய விலையில் நெல்களை கொள்வனவு செய்யாமையினால் உரிய விலையில் விற்பனை செய்ய முடியாத நிலையில் அந்த இடத்தில் வருகை தருகின்ற விற்பனை முகவர்களிடம் குறைந்த விலையில் நெல்லை விற்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்

மேலும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தமது நாளாந்த தேவைக்கு வேறு இடங்களில் இருந்து வருகின்ற அரிசியினையே பெற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறான செய்கையின் மூலம் கிடைக்கின்ற நெல்லை தமது மாவட்டத்திலேயே ஒரு அரைக்கும் ஆலை ஊடாக அரைத்து விற்பதன் மூலம் தமது நிதியும் சுழற்சி முறையில் தமக்கு பயனுள்ளதாக அமையும் எனவும் மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவற்றிற்கான அனைத்து சாதகத் தன்மைகளும் இருந்தும் இவற்றை சரியாக நடைமுறைப் படுத்தவில்லை எனவும் இந்த விடயங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்திலெடுத்து குறித்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் வெள்ளாங்குளம் வீதியின் ஓரமாக பல மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட அரைக்கும் ஆலை ஒன்று பல ஆண்டுகாலமாக திறக்கப்படாதுள்ளது.

இந்த அரைக்கும் ஆலையை உரிய முறையில் திறந்து இதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தங்களுடைய துணுக்காய் பிரதேசத்தில் அறுவடை செய்யப்படுகின்ற அனைத்து நெல்லினையும் கொள்வனவு செய்து அங்கே அரிசியாக்கி உள்ளூரிலேயே விற்பனை செய்யக்கூடிய வகையில் இருக்கும் என தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த ஆலையினை மிக விரைவாக இயங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் இதன் ஊடாக தமது பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை பெறமுடியும் என தெரிவித்துள்ளார். (9-281)

## வாகனம் மோதி 12 மாடுகள் பலி

(குருமன்காடு)



மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று முன்தினம் இரவு டிப்பர் வாகனம் மோதி 12 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளன.

மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் கல்குவாரிக்கு அண்மித்த பகுதியில் வீதியில் நின்ற எருமை மாடுகளை அவ் வீதி யூடாக பயணித்த டிப்பர் வாகனம் மோதித்தள்ளியதில் 12 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளன.

எனினும் டிப்பர் வானத்திற்கு சிறியளவில் சேதமேற்பட்டுள்ளதுடன் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் நிகழவில்லை.

சாரதிகளின் அவதானமின்மையும் கால்நடை வளர்ப்பாளர்களினது அசமந்தப்போக்குமே இவ் விபத்திற்கு காரணமாகும் என மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-250)

## மிளகாய்ப் பயிரில் குருமன் நோய் தாக்கம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மிளகாய்ப் பயிரில் குருமன் நோய்த் தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிக வெப்பம் இந்நோய்க்கான பிரதான காரணமாக அமைந்துள்ளதாகவும் இதன் காரணமாக மிளகாய்ச் செய்கையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் மேட்டுப் பயிர்ச் செய்கையில் மிளகாயும் முக்கிய பயிராக விவசாயிகளினால் செய்கை பண்ணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய குளமான முத்தையன் கட்டுக் குளத்தின் கீழ் கூடுதலாக மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

முத்தையன்கட்டுக் குளம் உருவாக்கமே மேட்டுப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்காகவே உருவாக்கப்பட்டது. தற்போது மாவட்டத்தின் பல இடங்களிலும் மிளகாய்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மிளகாய்ச் செய்கையில் காணப்படுகின்ற நோய்த்தாக்கத்திற்கு விவசாயத் திணைக்களம் உரிய மருந்துகளை சிபார்சு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)




## வவு.பம்பைமடு பகுதியில் தீ



(நெளுக்குளம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் அமைந்துள்ள பம்பைமடு பகுதியில் நேற்று மதியம் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் பற்றைக் காடுகளாக காணப்பட்ட பிரதேசத்திலேயே தீ பரவத்தொடங்கியிருந்தது. எனினும் கடும் காற்று மற்றும் வெயில் காரணமாக தீ வேகமாக பரவியதை அடுத்து அதனை கட்டுப்படுத்துவதற்காக வவுனியா நகரசபையின் தீ அணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டு தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கடும் பிரயத்தனத்திற்கு பின்னர் குறித்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் வவுனியா வளாகத்தின் கட்டடத்தொகுதிக்கு தீ பரவுது தடுக்கப்பட்டுள்ளமையினால் பாரிய சேதங்கள் ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளது. (9-299)



வவுனியா பிரதேச சர்வமத குழுவின் ஏற்பாட்டில் இலங்கை தேசிய சமாதான பேரவையினால் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கலந்துரையாடல் நேற்றுக்காலை வவுனியா பௌத்த வணக்கஸ்தலத்தில் இடம்பெற்றது.

நல்லிணக்கம் தொடர்பான பிரதேச சர்வ மதக்குழுவிற்கும், சிவில் பாதுகாப்புக்குழு மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூகப்பிரதிநிதிகள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமான இக்கலந்துரையாடல் பிற்பகல் வரையும் இடம் பெற்றது.

(படங்கள்: நெளுக்குளம் செய்தியாளர்)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 7 பொலிஸ் நிலையங்களிலும் சிறப்பாக சேவையாற்றிய பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக சிறப்பாக செயற்பட்ட பொலிஸார் கௌரவிக்கப்பட்டனர். குறித்த நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் விஜயகுணரட்ண, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழீழ விடுதலைப்புலிகளால் பாதுகாக்கப்பட்ட

# முல்லைத்தீவு இயற்கை வளங்கள் அழிகிறது

### மக்கள் பிரதிநிதிகள் வேடிக்கை பார்ப்பதாகக் குற்றச்சாட்டு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் வனப்பகுதிகள் மற்றும் இயற்கை வளங்கள் மிகவும் கடுமையான சட்டங்களுடன் பாதுகாக்கப்பட்டு வந்தபோதும் யுத்தம் நிறைவடைந்து சுமார் 10 ஆண்டுகளில் குறித்த இயற்கை வளங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரியளவில் அழிக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் யாரும் கண்டுகொள்ளாமல் இருப் பது வேதனையளிப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத் தீவு மாவட்டத்தை பொறுத்தளவில் கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு, காடழிப்பு, மர வியாபாரம் எனப் பல்வேறு வழிகளில் இயற்கை வளங்கள் அளிக்கப்படுவதோடு மணல் அகழ்வு மூலமும் பாரிய அளவில் இயற்கை வளங்களும் வனப் பகுதிகளும் அழிக்கப்பட்டு வரு வது வேதனை அளிக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிர தேச செயலக பிரிவுக்குட்பட்ட பதினெட்டாம் போர் பனிக்கன்குளம், கிழவன்குளம், மாங்குளம், அம்பகாமம், மணவாளன்பட்டமுறிப்பு ஒன்பதாம் கட்டை ஆகிய பல்வேறு பகுதிகளில் அதிகளவான மணல் அகழ்வு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டு அனுமதி விதிமுறைகளை மீறியும் சட்ட விரோதமாகவும் அனுமதிப்பத்திரங்கள் பெறப்படாமலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

அதேபோன்று துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் ஐயன் கன் குளம், புத்துவெட்டுவான் கோட்டை கட்டியகுளம், பழைய முறிகண்டி அம்பலப்பெருமாள்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் பெறப் பட்டும் அனுமதிப் பத்திரங்கள் பெறப்படாமலும் அனுமதிப்பத்திர வழிமுறைகளை மீறியும் பல்வேறு வகையில் அழிவுகளை ஏற்படுத்தும் வகையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன

அதேபோன்று கரைதுறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட பல்வேறு பகுதிகளிலும் இதே போன்று சட்டவிரோதமான முறையில் இடம்பெற்று வருகின்றது. அதேபோன்று மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிலும் இவ்வாறான நடவடிக்கைகள் அனுமதிப் பத்திரங்கள் இன்றியும் அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட்டும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளையும் மீறியும் பல்வேறு வகைகளிலும் இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளான உடையார்கட்டு தெற்கு ரெட்பானா, இருட்டுமடு, சுதந்திரபுரம், தேவிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பாரியளவில் காடுகள் அழிக்கப்பட்டு மணல் அகழ்வு என்ற பெயரில் இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது

குறிப்பாக மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில்மணல்அகழ்வு தொடர்பாக பல மணி நேரங்கள் விவாதிக்கப்பட்டு பலவிதமான நடைமுறைகள் கொண்டுவரப்பட்டு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு மணல் அகழ்வு பத்திரம் வழங்குவதில்லை எனவும் உள்ளூர் அமைப்புக்களுக்கும் மாவட்டத்தை சேந்தவர்களுக்கும் இந்த மணல் அகழ்வு பத்திரங்களை வழங்குவது எனவும் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் வெளி இடங்களைச் சேர்ந்த பல்வேறு செல்வந்தர்களுக்கு அரசியல் பின்னணி மற்றும் பணப் பின்னணிகளின் மத்தியில் அதிகாரிகளாலும் அரசியல் வாதிகளாலும் இந்த மணல் அகழ்வு அனுமதி வழங்கப்படுகின்றன.

இவற்றை எந்த அதிகாரி களும் கண்டுகொள்ளாத நிலையில் அதைச் சாதகமாக பயன்படுத்தி பல்வேறு தரப்பினரும் சட்ட விதிமுறைகளை மீறி அனுமதிப் பத்திரங்கள் இன்றி பல்வேறு பகுதிகளிலும் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றார்கள். இதனால் முல்லைத் தீவு மாவட்டத்தின் இயற்கை வளங்கள் பாரியளவில் பாதிக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இடம்பெற்று வருகின்ற இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் அனுமதிப்பத்திர நடைமுறைகளை மீறிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் என்பவற்றால் தொடர்ச்சியாக முல்லைத் தீவு மாவட்டம் வரட்சியான நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக பல ஆண்டுகாலமாக முல்லைத்தீவு வரட்சி என்பதை அறிந்திராத நிலையில் அண்மைய மூன்று, நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக வரட்சி முல்லைத்தீவு மாவட்டத்தை வாட்டி வருகின்றது. இவ்வாறான இயற்கை வளங்கள் காடுகள் அழிக்கப்படுவது இதற்கு காரணம் என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை மிக விரைவாக நிறுத்தி இந்த விடயத்தில் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)






1990 சுகசரிய அவசர உயிர் காக்கும் சேவை வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட நிறைவு விழா நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அவசர பிரிவு முகாமைத்துவ அதிகாரி ப.ஜெசிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூன்று மாவட்டத்தை சேர்ந்த சுகசரிய அவசர உயிர் காக்கும் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படம்: நெளுக்குளம் செய்தியாளர்)



மன்னார் மறைமாவட்டம் காத்தான்குளம் பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட "புனித சூசையப்பர் ஆலயத்தின்" அர்ச்சிப்பு விழாவும், ஆலயத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் இடம் பெற்றது. மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெர்னாண்டே ஆண்டகை குறித்த ஆலயத்தை திறந்த வைத்தார். இப் பங்கின் முதல் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்ட அருட்பணி. செ.வசந்தக் மார் அடிகளாரின் பணிக்காலத்தில் ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் அனுமதியோடு அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் தற்போதைய பங்குத் தந்தை அருட்பணி.யே.அமல்றாஜ் குரூஸினால் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படங்கள்-மன்னார் செய்தியாளர்)

## கிளிநொச்சியில் 21 ஆயிரத்து 830 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு 21 ஆயிரத்து 830 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் நிலவிய வரட்சி காரணமாக காலபோக செய்கைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டதுடன், சிறுபோக செய்கைகளும் மேற்கொள்ள முடியாத நிலை காணப் பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மழை காரணமாக இரணைமடுக்குளம் உள்ளி ட்ட நீர்ப் பாசனக்குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் மாவட்டத்தில் வரலாற்றில் முதல் தடவையாக 68 சத வீதமான சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மேற்கொள்ளப் பட்டுள்ள சிறுபோக செய்கை தொடர்பில் தகவல் வெளியிட்ட மாவட்ட விவசாயத்திணைக் களம், இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய நீர்ப்பாசனக்குளங்களின்கீழ் 21 ஆயிரத்து 300ஏக்கர் நிலப்பரப்பிலும் சிறிய நீர்ப் பாசனக் குளங்களின் கீழ் 530 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்றும் இதனைவிட இரணை மடுக் குளத்தின்கீழ் 500 ஏக்கரிலும் அக்கராயன் குளத்தின் கீழ் 450 ஏக்கரிலும் பிரமந்தனாறு குளத் தின் கீழ் 450 ஏக்கரிலும் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 480 ஏக்கரிலும் கனகாம் பிகைக் குளம் ஆகியவற்றின் கீழ் இரண்டாயிரத்து 880 ஏக்கர் நிலப்பரப்பிலும் நிலக்கடலை பயறு உள்ளிட்ட மறு வயற்பயிர்களும் தோட்டச் செய்கைகளும் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (9-315)

## முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் கூரைகள் சீரின்மையால் நோயாளர் அவதி

(அக்கராயன்)

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் கூரைகளில் ஏற்பட்டுள்ள துவாரங்கள், வெடிப்புகள் காரணமாக மழை காலத்தில் விடுதிகள் உட்பட சகல இடங்களிலும் மழைநீர் சிந்துவதாக வைத்தியசாலையின் உள்நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பத்தாண்டுகளில் வைத்திய சாலையின் கூரை வேலைகள் இடம்பெறாமை மற்றும் வைத்தியசாலை சூழலில் காணப்படுகின்ற மாமரங்களை நாடி வருகின்ற குரங்குகள் கூரையில் பாய்ந்து திரிவதன் காரணமாக கூரையின் பல இட ங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் கடந்த 24ஆம் திகதி பெய்த கடும் மழையின் போது பல இடங்களில் மழை நீர் சிந்தப் பட்டு நோயா ளர்கள் பலத்த நெருக்கடிகளை எதிர் கொண்டனர்.

எனவே இனிவரும் மழை காலத்தில் நோயாளர்களைப் பாதுகாப்பதற்கு வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குரங்குகளை கட்டுப்படுத்த மாவட்ட வன ஜீவரா சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)

## இரட்டை வாய்க்கால்-மாத்தளன் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரை துறைப் பற்றின் இரட்டைவாய்க்கால் தொடக்கம் மாத்தளன் வரையான 13 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப் படாததன் காரணமாக பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை. இதன் காரணமாக மாத்தளன், அம்ப லவன் பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 450 குடும்பங்கள் முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு நகரம் என்பவற்றிற்குச் சென்று வருவதில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.


2009ஆம் ஆண்டு போர் நடைபெற்ற காலங்களில் ஆயிரக் கணக்கான மக்கள் இப்பகுதியிலேயே தஞ்சம் அடைந்திருந்தனர். 2010ஆம் ஆண்டில் இருந்து இப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றம் இடம்பெற்றது. குறித்த வீதியினைப் புனரமைப்பதன் மூலம் முல்லைத்தீவு புதுக் குடியிரு ப்பு நகர ங்களில் இருந்து பேருந்து சேவைகள் இடம் பெறும்.

வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக மேற்படி கிராமங்களுக்கான பேருந்து சேவைகள் நடை பெறுவதில்லை.

குறித்த சேவையை ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# கார்கில் வெற்றி இந்தியாவின் வலிமையின் அடையாளமாகும்

## பிரதமர் மோடி பெருமிதம்



(டில்லி)

கார்கில் வெற்றி இந்தியாவின் வலிமையின் அடையாளமென பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் அடைந்துள்ளார். டில்லியில் கார்கில் போரின் 20ஆம் ஆண்டையொட்டி நடைபெற்ற கார்கில் வெற்றி தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மோடி மேலும் தெரிவித்ததாவது, "கார்கில் வெற்றி இந்தியாவின் வலிமை, மன உறுதி, திறன் ஆகியவற்றின் அடையாளம். போர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படுவது அல்ல. ஆனால் ஒட்டு மொத்த தேசத்தால் நடத்தப்படுவது.

அந்த வகையில் கார்கில் வெற்றி இன்னும் ஒட்டுமொத்த தேசத்தையும் கவர்ந்ததாகவே உள்ளது. இந்த வெற்றி ஒவ்வொரு இந்தியனின் வெற்றி.

பாகிஸ்தான் 1999ஆம் ஆண்டு கார்கில் வழியாக தவறான முறையில் எல்லையை மறுவரையறை செய்ய முயற்சித்தது.

ஆனால் இந்தியப் பாதுகாப்பு படைகள் அந்த தீய எண்ணத்தை முறியடித்தது. போர் உச்சத்தில் இருந்த சமயத்தில் நான் கார்கிலுக்கு சென்றேன். அது எனக்கு ஒரு யாத்திரை போல இருந்தது.

தேசத்தின் பாதுகாப்பு எந்தத் தாக்குதலுக்கும் இசைந்து கொடுக்காது. இப்போதும் அதேபோன்றே தொடர்கிறது.

ஆகையால் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றுக்கு இடையே கூட்டு முயற்சியை உறுதி செய்வதற்கான நேரம் வந்துள்ளது.

மேலும் தேசம் பாதுகாப்பாக இருந்தால்தான் வளர்ச்சி காண்பது சாத்தியமாகும்" என பிரதமர் மோடி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிரியாவில் உக்கிர

## 26 குழந்தைகள்

(டமாஸ்கஸ்)

**சிரியாவில் உக்கிரமடைந்துள்ள உள்நாட்டுப் காரணமாக 26 குழந்தைகள் உட்பட 100 இ மேற்பட்டவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்**

சிரியாவின் வட மேற்குப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள், சந்தைகள் மற்றும் உணவகங்களில் கடந்த பத்து நாட்களில் நடத்தப்பட்ட வான் தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த தாக்குதல்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மிச்செல் பச்சலெட் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கிளர்ச்சியாளர்களின் பிடியிலுள்ள பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சிரிய அரசு மற்றும் அதன் கூட்டாளிகளே காரணம் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல் 'வெளிப்படையான சர்வதேச அலட்சியத்தால்' நடைபெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். அத்து டன், உலகி ளில் உள்ள த எனவும் மிச்

இட்லிபில் ழப்புகள் குறி ளவில்லை எ டுக்கு வெளி தாகவும், இ னால் ஒன்று ஏற்பட்டுள்ளத

# கர்நாடகாவில் மேலும் 14 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம்

## சபாநாயகர் ரமேஷ்குமார் அதிரடி

(பெங்களூர்)

கர்நாடகாவில் காங்கிரஸ் மற்றும் மதசார்பற்ற எம்.எல்.ஏக்கள் 14 பேரையும் தகுதி நீக்கம் செய்து உத்தரவிட்டார் சபாநாயகர் ரமேஷ்குமார்.


கர்நாடகா சபாநாயகர் ரமேஷ்குமார் நேற்றுக் காலை 11.30 மணிக்கு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.


புதிதாக பதவியேற்றுள்ள எடியூரப்பா அரசு மீது நாளை நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படும். நிதி மசோதாவையும் நிறைவேற்ற அவசியம் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 11 பேர் மற்றும் மதசார்பற்ற ஜனதா தளம் எம்.எல்.ஏ.க்கள் 3 பேர் என மொத்தம் 14 பேரும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

இதையடுத்து, தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது. இவர்கள் அனைவரும் 2023 மே 15ஆம் திகதி வரை தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 700 பேருடன் வெள்ள சிக்கியுள்ள புகையி





(மும்பை)

மும்பையில் பெய்து வரும் கனமழை காரணமாக 700 பேருடன் மகாலட்சுமி எக்ஸ்பிரஸ் என்ற புகையிரதம் வெள்ளத்தில் சிக்குண்டுள்ளது.

வங்கானி என்ற பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் இந்த புகையிரதம் பெரும் வெள்ளத்தில் சிக்குண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட புகையிரதத்தில் உள்ளவர்களை மீட்பதற்கான நடவடிக்கை என தெரிவித்துள்ள அதி னுவ ஹெலிகொப்டர்கள், டியாக அந்தப் பகுதிக் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை புகையி நூற்றுக்கணக்கான பயண பேசி காணொலிகள் மூல மாறு வேண்டுகோள் விடு

# தலிபான்களுடன் சமாதானப் பேச்சு; உயர் மட்டக்குழு கலைக்கப்பட்டது

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் போட்டி அரசாங்கத்தை நடத்திவரும் தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமைத்த உயர்மட்ட குழுவை கலைத்து ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அரசிற்கு எதிரான பயங்கரவாத தாக்குதல்களை நடத்திவரும் தலிபான் இயக்கத்தினர் அந்நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அங்குள்ள சிறிய நீதிமன்றங்கள் மற்றும் வரிவிதிப்பு போன்றவற்றை நிர்வகித்துவரும் தலிபான் பயங்கரவாதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக போட்டி அரசாங்கம் ஒன்றை தனியாக நடத்தி வருகின்றனர்.

இவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டில் சுமுகமான நிலையை கொண்டு வர வேண்டும் என்று விரும்பிய ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஹமித் கர்சாய் கடந்த 2010ஆம் ஆண்டில் உயர்மட்ட அமைதிக் குழு ஒன்றை ஏற்படுத்தினார்.

இந்தக் குழுவின் முதல் தலைவராக நியமிக்கப்பட்ட அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி புர்ஹானுதின் ரப்பானி கடந்த 2011 ஆம் ஆண்டில் தலிபான்கள் நடத்திய பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவரது மறைவுக்கு பின்னர் வெளியுறவுத்துறை அமைச்சர் சலா ஹூதின் ரப்பானி, தேசிய இஸ்லாமிய முன்னணி இயக்கத்தின் நிறுவனத் தலைவர் சையத் அஹமத் கைலானி மற்றும் முன்னாள் துணை ஜனாதிபதி முஹம்மது கரிம் கலிலி ஆகியோர் இந்த அமைதி குழுவில் இடம் பெற்று, நாடு முழுவதும் கிளை அலுவலகங்களை திறந்து தலிபான் தலைவர்களுடன் பலசுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், இந்தக்குழுவை கலைத்து ஜனாதிபதி அஷ்ரப் கனி நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளார். (ஐ)

# பஹ்ரைனில் மூன்று பே மரணதண்டனை நிறைே

(பஹ்ரைன்)

பஹ்ரைனில் மூவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் பொலிஸ் அதிகாரி கொலை வழக்குடன் தொடர்புடைய இருவருக்கே நேற்று முன்தினம் சனிக்கிழமை இவ்வாறு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை குறித்த மரண தண்டனையை நிறுத்துமாறு பஹ்ரைன் அரசாங்கத் திடம் கோரி

எனினு கோரிக்கை பஹ்ரைன் னையை ந விக்கப்பட்டு

# வெளிநாடு



# கிரமடையும் உள்நாட்டுப்போர்
# கள் உட்பட 100 பேர் உயிரிழப்பு!

### ள்நாட்டுப் போர்
### 100 இறக்கும்
### துள்ளனர்.

டன், உலகின் வலிமைவாய்ந்த நாடுக ளில் உள்ள தலைமையின் தோல்வி இது எனவும் மிச்செல் தெரிவித்துள்ளார்.

இட்லிபில் அதிகரித்து வரும் உயிரிழப்புகள் குறித்து எவரும் கண்டுகொள்ளவில்லை எனவும், சர்வதேச கட்டுப்பாட்டுக்கு வெளியே இந்த போர் சென்று விட்டதாகவும், இதன்காரணமாக ஐ.நாவினால் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.





பொதுமக்களுக்கு எதிராக நடத்தப்படும் சர்வதேச தாக்குதல்கள் போர்க்குற்றங்களாகும். அந்தத் தாக்குதலுக்கு ஆணையிட்டவர்கள், அல்லது நடத்தியவர்கள்தான் அதற்கு பொறுப்பு எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)

## ள்ளத்தில்
## கயிரதம்



நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன ந்துள்ள அதிகாரிகள் இரண்டு இரா கொப்டர்கள்,ஆறு படகுகளை உடன நப் பகுதிக்கு அனுப்பியுள்ளதாக ளனர்.

ளை புகையிரதத்தில் சிக்கியுள்ள க்கான பயணிகள் கையடக்க தொலை லிகள் மூலம் தங்களை காப்பாற்று கோள் விடுத்துள்ளனர். (ஐ)

# ஹொங்கொங்கில் மீண்டும் போராட்டம்; பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 45 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




கடந்த வாரம் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து, வடக்கு மாவட்டமான யுவான் லாங் வழியாக நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக சென்றனர்.

பொலிஸார் எதையும் கண்டுகொள்ளாமல் தாக்குதலாளிகளுடன் கைகோர்ப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குற்றம் சுமத்தியிருந்தனர். எனினும் இந்த குற்றச்சாட்டுக்களை பொலிஸார் மறுத்து வருகின்றனர்.

ஏழு வாரங்களாக அரசாங்கத்திற்கு எதிரான, ஜனநாயகத்திற்கு ஆதரவான போராட்டங்கள் பல ஹொங்கொங்கில் நடைபெற்றுள்ளன.

குற்றவாளிகளை சீனாவிடம் ஒப்படைக்கக்கூடிய சட்டத்திருத்தம் காரணமாக அங்கு தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து குறித்த சட்டத்திருத்தம் கைவிடப்பட்டது. எனினும், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை, உள்நாட்டு சீர்திருத்தம் மற்றும் ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லெம் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பேருக்கு
## றவேற்றம்

திட்டம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கையினை நிராகரித்திருந்த பஹ்ரைன் அரசாங்கம் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அமெ.கூட்டுப்படை வான்வழித்தாக்குதலில் இருபது தலிபான் பயங்கரவாதிகள் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 20 தலிபான் பயங்கரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அந்நாட்டு அரசுடன் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனாலும், இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.




இதையடுத்து, போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அமெரிக்கா தலைமையில் தலிபான் பயங்கரவாதிகளுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் கடந்த இரு நாட்களாக இந்த பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் கஜினி மாகாணத்தில் உள்ள காராபாக் மாவட்டத்தில் சையது வாலி மற்றும் மர்வார்டா ஆகிய பகுதிகளில் அமெரிக்க கூட்டுப்படை நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இதில் 20 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர். (ஐ)

### “பொலிஸார் மீது நம்பிக்கையில்லை”

# ஷாபி விவகாரம் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு

### ரத்ன தேரர் வலியுறுத்து





(கொழும்பு)

குருநாகல் வைத்தியர் மொஹமட் ஷாபி விவகாரம் தொடர்பாக. நாடாளுமன்றில் தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தினார்.

மேலும் இந்த விடயத்தில் பொலிஸார் மீது நம்பிக்கையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“குருநாகல் வைத்தியசாலையில் பணிப்பாளர், 900 தாய்மார்களிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நேர்ந்த பல்வேறு அநீதிகளைத் தெரிவித்திருந்தார்.

குறித்த பெண் அல்லது அவரது கணவரின் ஒப்புதலின்றி கருக்கலைப்பு செய்வதானது சிறைச்சாலைக்குச் செல்லுமளவுக்குப் பாரிய குற்றமாகவே கருதப்படுகிறது. இவ்வாறான பல கருக்கலைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இந் நிலையில், இதுதொடர்பாக சாட்சியமளித்த குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

வைத்தியர் மொஹமட் ஷாபியூடாக, சத்திரசிகிச்சை செய்து கொண்ட முஸ்லிம் பெண்களுக்கு குழந்தை இருக்கும் போது, சிங்களப் பெண்களுக்கு மட்டும் குழந்தை எவ்வாறு இல்லாது போனது என்பதுதான் எமது கேள்வியாக இருக்கிறது.

இதுதொடர்பாகத் தீர்க்கமான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.

வைத்தியர் ஷாபியின் சொத்துக்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனை அவர்கள் மேற்கொள்ளத் தவறுவார்களாயின், குருநாகல் பொதுமக்களுடன் இணைந்து நாம் அனைத்து விடயங்களையும் வெளிக்கொண்டுவருவோம் என்பதை இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன்.

அவரின் சொத்துக்கள், வருமானம், வங்கிக் கணக்கு குறித்த அனைத்து விடயங்களும் எம்மிடம் இருக்கின்றன.

பொலிஸாரும் நீதிமன்றமும் பொதுமக்களுக்கு சட்டத்தை கையில் எடுக்க இடமளிக்கக் கூடாது.

எனவே, இதுதொடர்பாக உரிய நடவடிக்கையை எடுக்க அதிகாரிகள் தவறுவார்களாயின், நாம் அனைத்து விடயங்களையும் அறிக்கையாகத் தயார் செய்து வெளியிடுவோம். இதனை எவராலும் தடுக்க முடியாது.

எனவே, இதுதொடர்பாக நாடாளுமன்றில் விசேட தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டுக்கு ஒப்புதல்

### மைத்திரிக்கு அலைனா அவசர கடிதம்



(கொழும்பு)

மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டுக்கு ஒப்புதலை அளிக்கும் விடயத்தில் தலையிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் அவசர கடிதம் ஒன்றை அனுப்பினார்.

இந்த உடன்பாட்டின் சில உட்பிரிவுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் கவலைகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த உடன்பாட்டுக்கு அனுமதியளிக்க மறுத்திருந்தார்.

முன்மொழியப்பட்டுள்ள உடன்பாட்டில் சில சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தொடர்பாக, அவசர கடிதத்தில், அமெரிக்கத் தூதுவர் ரெப்லிட்ஸ் தெளிவுபடுத்தினார்.

இந்த உடன்பாடு வெளிப்படையானது என்றும், இலங்கை மக்களுக்கு செழிப்பை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

40 ஆண்டுகளுக்கும்மேலான அரசியல் அனுபவம் உள்ள ஜனாதிபதி மைத்திரி கடந்த பத்தாண்டுகளாக இலங்கையின் வளர்ச்சியில் அமெரிக்காவின் முதலீடுகளின் பங்களிப்பு குறித்து நன்கு அறிந்திருப்பார் என்பதையும் அமெரிக்கத் தூதுவர் தனது கடிதத்தில் நினைவுபடுத்தினார்.

இந்த உடன்பாட்டின் மூலம் வழங்கப்படவுள்ள 480 மில்லியன் டொலர் அமெரிக்க மக்களிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கும் ஒரு பரிசு என்றும் அது கடன் அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தக் கடிதத்தில் மிலேனியம் சவால் நிதியத்தின் கொடையால் ஏற்படக் கூடிய பயன்கள் குறித்தும், அதில் எந்தத் தலையீடுகளும் இருக்காது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் விரிவான விளக்கமளித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### இடதுகைப் பெருவிரல்

“இதோ இருக்கின்றாரே இவர் என்னுடைய வலதுகை!” என்று அறிமுகப்படுத்துவது உண்டு–சில பேரை! அர்த்தம்? அவர் உருவம் பார்ப்பதற்கு வலதுகை போல் இருக்கிறது என்றா அர்த்தம்? அவர் தலை இருக்க வேண்டிய இடத்திலே ஐந்து விரலும் இருக்கும்? அப்படி இல்லை.

மிகவும் நெருக்கமானவர் நம்பிக்கைக்குரியவர் என்று அர்த்தம். அவர் இல்லாமல் நான் இல்லை என்று அர்த்தம். நம்பிக்கைக்குரியவர் என்பதை சொல்வதற்கு வலதுகையை ஒப்பிடுவது வழக்கம்.

ஆனால் நம்பிக்கைக்கு உரியது வலதுகையா? இடது கையா? என்று அப்படி ஒரு கேள்வி கேட்டால் இடதுகை தான் என்று சில பேர் பதில் சொல்கிறார்கள். ஏன் தெரியுமா?

பத்திரமெல்லாம் எழுதி பதிவு செய்கின்றோமே அதிலே எந்த விரல் ரேகையைப் பதிவு செய்கின்றோம். இடதுகைப் பெருவிரல் ரேகையைத்தானே!

இதனாலே இடது நம்பிக்கைக்கு உரியது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி சொல்கிறவர்கள் யார் என்று நினைக்கின்றீர்கள்? விரல் ரேகைப் பதிவுக்கூடத்திலே வேலை பார்க்கின்றவர்கள் தான்.

அவர்களை சந்திப்பதற்கு நான்கு நாளைக்கு முன்னாடி என்னுடைய நண்பர் ஒருவரோடு பீச்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அந்த நண்பன் ஒருமாதிரியான ஆள்.

ஏன்ன கேள்வி கேட்டாலும் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லவே மாட்டார். ஏதாவது ஒரு பதிலை சொல்லி விடுவார். அது சரியா தப்பா என்று யோசிக்க மாட்டார். அவரிடம் அன்றைக்குக் கேட்டேன்.

“ஏன் சேர் முக்கியமான ஆவணங்களில் எல்லாம் இடது கைப்பெருவிரல் ரேகையைப் பதிவு செய்கின்றோமே அது எதனால்? என்று கேட்டேன். வலதுகை சாப்பிடுகின்றகை அதிலே மை தடவினால் அதைக் கழுவுவதற்கு கஷ்டமாய் இருக்கும். அதனாலே தான் இடதுகை விரலை உபயோகப்படுத்துகின்றோம் என்றார்.

சரி இதற்கு மேல் இவரிடம் பேச வேண்டாமென்று விட்டு விட்டேன். அதன்பின் விரல் ரேகைக் கூடத்திலே வேலை பார்க்கின்ற சிலபேரைச் சந்தித்து விபரம் கேட்டேன். அவர்கள் சரியான தகவல்களைச் சொன்னார்கள். முதலில் நாம் எதற்காக குறிப்பாக பெருவிரல் ரேகையை மட்டும் ஆவணங்களிலே பதிவ் செய்கின்றோம்? மற்ற நான்கு விரல்களிலே மட்டும் ரேகை இல்லையா? இருக்கு, இருந்தாலும் தாராளமாய் இல்லை.

மற்ற விரலைக் காட்டிலும் பெருவிரல் பெரியது. அதனால் தான் அதுக்கு அந்தப் பேர்.

மற்ற விரலைக் காட்டினாலும் பெரு விரலிலே அதிகமான விரல் ரேகைக் கோடுகள் இருக்கு. இப்படி அதிகமாக இருக்கிறதனாலே இது நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய்வதற்கு மிகவும் உதவியாகயிருக்கும்

அதனாலேதான் பெருவிரல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சரி மற்ற விரல்களை பெருவிரல் மிகவும் வசதியாக இருக்கிறது. அதற்கு வலது கையிலே இருக்கிற பெருவிரலை உபயோகப்படுத்தினால் என்ன? எதற்கு இடது கையில் இருக்கிற பெருவிரலை மட்டும் உபயோகப்படுத்துகிறார்கள். இதற்கு ஒரு காரணம் உண்டு. நாம் சாதாரணமாக அன்றாட வேலைகளுக்கு அதிகமாக உபயோகப்படுத்துகின்ற கை எது? வலது கை!

வலது கையை அதிகமாக உபயோகப்படுத்துவதனாலே அந்தக் கையிலுள்ள விரல் ரேகைகள் தேய்மானம் அடைவதற்கு சந்தர்ப்பம் அதிகம். அதனாலே ரேகைக் கோடுகள் தெளிவில்லாமலே போகலாம். ஆனால் இடது கையை நாம் அதிகமாக உபயோகப்படுத்தாத காரணத்தால் இடதுகை பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளிவாகக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

அதுமட்டுமல்ல அடிக்கடி உபயோகப்படுத்துவதாலே விபத்திலே பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பும் வலதுகைக்கு அதிகம். இடது கை safe. இடதுகை பெருவிரல் ரேகைக்கு முக்கியத்துவம் கொடுப்பது இதனால்தான் .ஒருவர் வந்தார். அவருக்கு இடது கையிலே கட்டை விரல் இல்லை. என்னப்பா ஆச்சு? என்று விசாரித்தார் ஒரு பெரியவர்.

ஒரு மிஷினில் தவறுதனாக கையை விட்டுவிட்டேன் என்றான். நல்ல வேளை வலதுகை கட்டைவிரல் போயிருந்தால் சாப்பிடவே முடியாமல் போயிருக்கும் என்றார் பெரியவர்.

ஆமாம் சேர் முதலிலே வலது கைதான் மிஷினிலே மாட்டுக் கொள்ள இருந்தது. நீங்கள் சொன்னதுபோல் நானும் யோசித்துப் பார்த்துத்தான் புத்திசாலித்தனமாக உடனே வலது கையை கொடுத்து விட்டேன் என்றான் அவன்.

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து

# என்னிடம் விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை

## தெரிவுக்குழு முன் சட்டமா அதிபர் தர்க்கம்



(கொழும்பு)

பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக நேற்று முன்தினம் அழைக்கப்பட்ட சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தான் தெரிவுக்குழு முன்னால் சாட்சியமளிப்பது தொடர்பாக சட்ட தர்க்கங்களை முன்வைத்து தான் சாட்சியமளிப்பதைத் தவிர்த்துக்கொண்டதுடன் சாட்சியமளிக்க மாற்று அதிகாரிகளை ஏற்பாடு செய்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட சட்டமா அதிபர் மற்றும் அதிகாரிகளிடம் விசாரணைகளை ஆரம்பிக்க முயன்ற போது உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவம் குறித்து மேல் நீதி மன்றத்திலும் மற்றும் உயர் நீதிமன்றத்திலும் வழக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அமைச்சரவை, அரசாங்கம் , ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பாக அதில் ஆஜராகும் தான் தெரிவுக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளை குறிப்பிட்டு சட்ட தர்க்கங்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தெரிவுக்குழுவினர் கூடி ஆராய்ந்து அவரிடம் சாட்சியத்தை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக்கொண்டனர்.

எவ்வாறாயினும் அவருக்கு பதிலாக சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு அதிகாரிகள் இருவரிடம் தெரிவுக்குழுவினர் சாட்சியங் களைப் பதிவு செய்தனர்.

ஆரம்பத்தில் சட்டமா அதிபர் தன்பக்க கருத்துக்களை கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அத்துடன் அரசாங்கம் மற்றும் அமைச்சரவை தொடர்பாக அடிப்படை உரிமை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

அவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி சட்டமா அதிபர் என்ற ரீதியில் அரசாங்கம், அமைச்சரவை, பிரதமர், ஜனாதிபதி சார்பாக நானே நீதிமன்றத்தில் ஆஜராகின்றேன்.

இவ்வாறான நிலைமையில் தெரிவுக்குழுவில் அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்கள் என்னிடம் விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை. அத்துடன் இங்கு என்னிடம் சாட்சியத்தை பெற்றுக்கொண்டு இறுதியில் அது தொடர்பான அறிக்கை தொடர்பான சட்ட ஆலோசனைக்காக அது எனக்கே அனுப்பி வைக்கப்படும். இது பொருத்தமாகாது.

அத்துடன் நான் இங்கு சாட்சிமளிக்கும் போது மனுதாரர்களோ, பிரதிவாதிகளோ எனது சாட்சியை நீதிமன்றத்தில் முன்வைக்க முடியும். அதனை வழக்கு விசாரணைகளில் பயன்படுத்த முடியும். அத்துடன் இந்தத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் சிலவற்றை வழக்குகளுக்குப் பயன்படுத்த முடியும்.

எனது சாட்சியை உயர் நீதிமன்றத்தில் முன்வைத்தால் அவர்கள் அது தொடர்பான சாட்சியாளராக என்னைக் குறிப்பிடலாம். இதனால் சட்டமா அதிபர் என்ற ரீதியில் எனது பணிகளுக்கு சிக்கல் ஏற்படலாம். இதனால் அனுமதிக்கப்பட்ட தரப்பினருக்கு சாட்சியத்தை முன்வைக்குமாறு கோரியுள்ளேன். நான் முன்வைத்த விடயம் தொடர்பாக எதிர்ப்பு இருக்கலாம்.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளித்தால் நான் அமைச்சரவைக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாவது செல்லுபடியற்றதாகும். அத்துடன் நான் இந்த இடத்தில் சாட்சியமளித்தால் குற்றவியல் வழக்கு விடயங்களில் குற்றப் பத்திரிகை என்னைப்பற்றியும் முன் வைக்க நேரிடும்.

இந்த இடத்தில் தெளிவான முரண்பாடு உள்ளது. இதனால் இந்த இடத்தில் சாட்சியமளித்தால் எதிர்காலத்தில் சட்டமா அதிபர் பணியை முன்னெடுப்பதில் பிரச்சினை இருக்கும் என்றார்.

இதனைத் தொடர்ந்து அவரின் தர்க்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்திய தெரிவுக்குழுவினர் நீங்கள் சாட்சியமளிக்காவிட்டால் உங்களின் கீழ் உள்ள அதிகாரிக்கு இங்கு சாட்சிமளிக்க முடியுமா? என அவரிடம் கேட்டதுடன் இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக 15 நிமிடங்கள் வரையில் குழு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக ஒத்தி வைத்தனர்.

இதன்பின்னர் மீண்டும் தெரிவுக்குழு கூடிய போது தனது தர்க்கத்தை மீண்டும் அவர் முன்வைத்து தனக்குப் பதிலாக சாட்சியமளிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த இருவரை அவர் பரிந்துரைத்தார்.

இதன்படி சட்டமா அதிபரிடம் சாட்சியத்தை பெற்றுக் கொள்வதை தவிர்த்துக் கொண்ட தெரிவுக்குழு சட்டமா அதிபரால் பரிந்துரைக்கப்பட்ட சட்டத்தரணி தர்மரட்ன மற்றும் சட்டத்தரணி அசீஸ் ஆகியோரிடம் குழுவினர் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். (இ-7)

# கட்சியிலிருந்து வெளியேறுபவர்கள் குறித்து எமக்கு கவலையில்லை - ரோஹித விளக்கம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்பவர்கள் தொடர்பாக தமக்கு கவலையில்லையென மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அத்தோடு, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீண்டும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்துகொண்டமையானது, தமக்கு எந்தவகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாம் என்றும் எதிரணியாக கருதியதே கிடையாது. இந்தக் கட்சியிலிருந்துதான் நாம் அனைவரும் இந்த இடத்திற்கு வந்துள்ளோம்.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அடுத்த தேர்தலில் கூட்டணி அமைத்துக்கொண்டு களமிறங்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்ள முடியாது. இது இரண்டும் பாம்பும் கீரியும் போன்ற கட்சிகள்.

ஆனால் சுதந்திரக் கட்சியினருக்கு, எம்முடன் இணைவதில் எந்த சிக்கலும் இருக்காது என்பதே எமது கருத்தாகும். இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு சென்றமையானது எமக்குப் பெரிதாக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி, மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி பதவி இல்லாது போனது. அப்போது, அவர் அலரி மாளிகையிலிருந்து வெளியேறுகையில், அவருடன் 10 வருடங்களாக உடனிருந்த அமைச்சர்கள், புதிய அரசாங்கத்துடன் இணைந்துகொண்டார்கள்.

இவ்வாறு பிரிந்தவர்கள், தற்போது எந்த நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதைத்தான் கேட்க விரும்புகின்றேன். எனவே, எமது தரப்பிலிருந்து வெளியேறுபவர்கள் தொடர்பாக கவலையடையத் தேவையில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# எரிவாயு கசிவால் உணவகம் தீக்கிரை



(சாய்ந்தமருது)

கல்முனை சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தீப்பற்றி எரிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். எரிவாயு கசிவினால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக அந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

இத்தீவிபத்து காரணமாக ஹோட்டலின் சமையலறை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் கடையின் பெயர்ப்பலகையும் எரிந்துள்ளது. ஆயினும், இவ்விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் இத்தீவிபத்து இடம்பெற்றதுடன் சம்பவத்தை கேள்வியுற்ற கல்முனை மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் ஸ்தலத்திற்கு விரைந்து ஏனைய இடங்களுக்கும் தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மீண்டுமொருமுறை தெரிவுக்குழுவில் முன்னிலையாகும் இராணுவத் தளபதி



(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்கவை, நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவுக்கு மீண்டும் அழைக்க தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் 31ஆம் திகதி இவர் தெரிவுக் குழுவில் முன்னிலையாவாரென்றும் அன்றைய தினமே பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கபில வைத்தியரத்னவும் விசேட தெரிவுக்குழுவில் முன்னிலையாவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# அனுமதி அட்டை வழங்கல்

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2019 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் 30.07.2019 செவ்வாய்க்கிழமை வழங்கப்படும். எனவே மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து தேசிய அடையாள அட்டையுடன் வர வேண்டும் எனவும் பரீட்சையானது ஒன்லைன் மூலமாக 14.10.2019 தொடக்கம் 21.10.2019 வரை இடம்பெறும் எனவும் அதிபர் எம்.ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்


12



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

உங்களுடைய தீர்மானம் எதுவாக இருந்தாலும் புகையிலிருந்து உங்களை நீங்கள் பாதுகாக்க வேண்டும்.

**உங்கள் தொடர்மாடிக் கட்டடத்தில் தீ ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து வைத்திருங்கள்**



**ஒவ்வொரு செக்கனும் முக்கியமானதால், நீங்கள் விரைவாகச் செயல்பட வேண்டும்**

### அண்மையில் கண்டியில் நடந்த சம்பவமொன்று

கண்டி, யட்டிநுவர வீதியிலுள்ள ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று அண்மையில் திடீரென தீப்பற்றி எரிந்ததில் மாடியின் மேலே குடியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் 4 ஆவது மாடியிலிருந்து பாய்ந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். மூன்று பிள்ளைகளையும் கட்டடத்தின் ஜன்னலுக் கூடாக வீசியெறிந்த பின்னர் கணவனும் மனைவியும் ஜன்னலுக்கூடாகவே கீழே குதித்து உயிர் தப்பிய மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி அப்பகுதியில் பெரும் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

கட்டடத்தின் மூன்றாம் மாடியில் ஏற்பட்ட தீ நான்காம் மாடிக்கு பரவியது. இதனால் ஐந்தாம் மாடியில் குடியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் அவர்களின் மூன்று ஆண் பிள்ளைகளும் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்து கீழே குதித்து உயிர் தப்பியுள்ளனர்.

தனது மூன்று மகன்களையும் ஜன்னலுக்கூடாக கீழே வீசி எறிந்த தந்தை, பின்னர் அவர் கீழே குதித்து கட்டடத்தை பிடித்து தொங்கியபடி மனைவியையும் குதிக்குமாறு கூறினார். குதிப்பதற்கு தயாராகியும் தயக்கத்துடன் இரண்டு தடவை மீண்டும் மாடிக்கு சென்ற மனைவி, இறுதியில் கீழே பாய்ந்தார். கட்டடத்தில் தொங்கியபடி மனைவியைப் பற்றிப் பிடித்த கணவன், அவரை கீழே எறிந்துவிட்டு தானும் கீழே குதித்தார். இவர்கள் சிறு சிறு சிறாய்ப்புக் காயங்களுக்குள்ளானார்கள்.

முதலில் தனது கடைசி மகனை இரு கைகளாலும் பிடித்து ஜன்னல் வழியே கீழ் நோக்கி தந்தை வீசினார். அதற்கு முன்பதாகவே கீழே கூடியிருந்த பொதுமக்களும் பொலிஸாரும் தந்தைக்கு பூரண ஆதரவு கொடுத்து உற்சாகமூட்டி அவர்களை கீழ்நோக்கி வீசுமாறும் தாம் பிடித்துக் காப்பாற்றுவதாகவும் கூறினர். இதற்காக துணிகள் மற்றும் மெத்தைகளையும் கீழே பொதுமக்கள் விரிந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இன, மத, மொழி, பால் வேறுபாடுகளைக் கடந்த மனிதநேயத்தின் மகத்துவத்தை இந்த சம்பவம் பறைசாற்றுகின்றது.

### கூட்டுரிமை ஆதனங்களின் வகைகள் (Types of Condominium Properties)

முன்னர் கூறியதுபோல் ஆரம்பத்தில் இயற்றப்பட்ட சட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்ட கூட்டுரிமை தனி அலகுகளின் கைமாற்றம் (transfer) பற்றி மட்டுமே கூறப்பட்டிருந்தது. ஒருவர் புதிதாக கட்ட திட்டமிடப்பட்டுள்ள தொடர்மாடிக் கட்டடத் தொகுதியில் ஓர் அலகினை வாங்குவது சம்பந்தமாக அல்லது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் தொடர்மாடிக் கட்டடத் தொகுதியில் ஓர் அலகினை வாங்குவது சம்பந்தமாக எவ்வித நடைமுறைகளோ அல்லது விதிமுறைகளோ சட்டத்தில் கூறப்பட்டிருக்கவில்லை. இதனை நிவர்த்திசெய்யும் முகமாக 2003ஆம் ஆண்டில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி கூட்டுரிமை ஆதனங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அவையாவன கூட்டுரிமை ஆதனம் (Condominium Property). அரை கூட்டுரிமை ஆதனம் (semi Condominium Property) மற்றும் முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனம் (Provisional Condominium Property) ஆகும்.

**கூட்டுரிமை ஆதனங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன, கூட்டுரிமை ஆதனம் (Condominium Property), அரை கூட்டுரிமை ஆதனம் (semi Condominium Property) மற்றும் முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனம் (Provisional Condominium Property) ஆகும்.**

### கூட்டுரிமை ஆதனம் (Condominium Property)

ஒரு காணித்துண்டில் (நிலப்பரப்புக்குள்) இருக்கும் பல அலகுகளைக் கொண்ட கட்டடத்தில் உள்ள அலகுகளை தனித்தனி அலகுகளாக / வீடுகளாக பிரிக்க முடியுமாயின் அது கூட்டுரிமை ஆதனம் (Condominium Property) என அழைக்கப்படும். அக்காணித் துண்டானது அதற்குள் இருக்கும் கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு சொந்தமானது.

### அரை கூட்டுரிமை ஆதனம் (Semi Condominium Property)

ஒரு தனிக் காணித்துண்டில் (நிலப்பரப்புக்குள்) ஒரு கட்டடத்தின் நிர்மாணம் பாதியளவில் முடிந்திருக்கும் போது அதில் ஒன்றுக்கு மேற்பட்ட தனி அலகுகள் (Condominium Parcels) பாவனைக்கேற்ற முறையில் கட்டி முடிக்கப்பட்டிருப்பின் அவை அரை கூட்டுரிமை ஆதனம் (semi Condominium Property) என அழைக்கப்படும்.

### முன்னேற்பாட்டுக் கூட்டுரிமை ஆதனம் (Provisional Condominium Property):-

ஒரு தனிக் காணித்துண்டில் (நிலப்பரப்புக்குள்) தனித்தனி வீடுகளாக உட்பிரிவு செய்யப்படக்கூடிய விதத்தில் பல அலகுகளைக் கொண்ட கட்டடம் அமைக்க வரைபடம் வரையப்பட்டு முன்னேற்பாடு செய்யப்பட்டிருப்பின் அவ்வாறு கட்ட எதிர்பார்க்கும் கட்டடம் முன்னேற்பாட்டுக் கூட்டுரிமை ஆதனம் (Provisional Condominium Property) என அழைக்கப்படும்.

### கூட்டுரிமை படம் (Condominium Plan)

**கட்டடப்படம் (Building Plan) என்பது கட்டட அமைப்புச் சம்பந்தமான வேலைகளுடன் தொடர்புபட்டது. கூட்டுரிமை ஆதனப்படம் (Condominium Plan) என்பது கூட்டுரிமை ஆதனச் சொத்தை பிரிக்கும் ஒரு முறையாகும். கூட்டுரிமை படம் (Condominium Plan) காணி இருக்கும் இடம், விஸ்தீரணம், காணியின் எல்லைகள், தனிஅலகு உரிமை, துணைஅலகு, பொதுக்கூறுகள், பங்குப்பெறுமதி ஆகியவற்றுடன் தொடர்புபட்டது.**

கூட்டுரிமை படம் (Condominium Plan) என்பது கூட்டுரிமை ஆதனத்திற்கான (Condominium Property) படமாகும். இது ஒருவருக்கு உரித்தான கட்டடங்களை/ சொத்துக்களை பிரிவிடல் செய்வதற்கான ஒரு முறையாகும்.

இதன் மூலம் ஒருவர், ஒரு கட்டடம் / கட்டடத்தின் ஒரு பகுதி அல்லது ஒரு "அலகு", மற்றும் தனிமனித உரிமையாளர்களுக்குமான பொதுவான சொத்துக்களை (common elements) உள்ளடக்கிய சொத்துக்கு உரித்துடையவர் ஆவர். கூட்டுரிமை ஆதனம் என்பது குடியிருப்பு (residential) கட்டடங்கள், வணிகக் (commercial) கட்டடங்கள் அல்லது தொழில்துறைக் (industrial) கட்டடங்கள் போன்ற எல்லாவற்றிற்கும் பொருந்தும் கட்டடத்தொகுதியைக் குறிக்கும். இக் கட்டடத்தொகுதி புதிய கட்டடங்கள் அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களாக இருக்க முடியும். கூட்டுரிமை படத்தில் அல்லது கூட்டுரிமை படத்துடன் கொடுக்கப்படவேண்டிய தகவல்கள் 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 5 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுரிமை படமானது பதிவு செய்த உத்தரவு பெற்ற நில அளவையாளரால் அல்லது நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படம் / நில அளவைப்படங்களைக் கொண்டிருக்கும்.

கூட்டுரிமை ஆதனத்தின் தனி அலகுகளின் உரிமையாளர்களின் சொத்துரிமைகளை வெவ்வேறாக காட்டப்படும். கூட்டுரிமை படத்தில் பின்வரும் பகுதிகள் உள்ளடங்கும்.

(தொடரும்...)

# எந்தவொரு கட்சியுடனும் சென்று பின்வரிசையில் அமரத் தயாரில்லை

## அமரவீர திட்டவட்டம்



(கொழும்பு)

எமக்குப் பலமான கூட்டணியொன்றை அமைப்பதற்கான பலம் உள்ள நிலையில், எந்தவொரு கட்சியுடனும் பின்னால் சென்று பின்வரிசையில் அமர்ந்து கொண்டிருக்கத் தேவையில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் குமார வெல்கமவும் கலந்து கொண்டார்.

நாம் யாருக்கும் கீழ்படிந்து அரசாங்கம் அமைக்கத் தயாரில்லை. பலமான கூட்டணியொன்றை அமைக்கும் பணியில் நாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம் எனவும் அமரவீர மேலும் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதற்காக ஆறு தடவைகள் கலந்துரையாடல்கள் இடம்பெற்று தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாத நிலையில் இவ்வாறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை! ஐ.தே.க. எம்.பிக்கள் பலர் தயக்கம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்திருந்த நிலையில், அந்தப் பிரேரணையில் கையொப்பமிட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டுவதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.

குற்றப் பிரேரணைக்கு இதுவரையில் 10 பேர் மாத்திரமே கையொப்பமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் இறுதியில் அரசியல் நெருக்கடி நிலையை தோற்றுவித்து நாட்டில் குழப்ப நிலையை உருவாக்கியமை, ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காமை போன்ற காரணங்களை மையப்படுத்தியே ஜனாதிபதிக்கு எதிராக இவ்வாறு குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிய 38 பேர் இதுவரை உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி எந்த வித அடிப்படை தீர்வுகளையும் பெறாமல் இதுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 38 பேர் உயிரிழந்துள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் உயிர் இழந்த தாயின் இறுதி வணக்க நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

புதுக்குடியிருப்பு. இரணைபாலையைச் சேர்ந்த திருமதி செபமாலைமுத்து திரேசம்மா கடந்த 24 ஆம் திகதி மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவரது மகனான செபமாலைமுத்து ஜெபபிரகாஸ் என்பவர் 01.07.2008 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கனகரத்தினம் காந்தமலர், சபாரத்தினம் மனோன்மணி, தெய்வேந்திரன் இந்திரா. நாகராசா சிவமணி. சாமித்தம்பி திரவியம்,திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சுந்தரம்பிள்ளை அருந்தவம், தவரட்ணம் பத்மாவதி, ராமன் கமலம், வீரகத்தி அமிர்தலிங்கம். சொக்கன் பரமேஸ்வரி, சுந்தரம் லெட்சுமிப்பிள்ளை. நாகராசா சிவசோதி, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பரமசிவம் தெய்வாஈஸ்வரி, மகேந்திரன் உதயராணி, லைநீதன் இளவரசி, தம்பிமுத்து அமரசிங்கம், அழகிப்போடி சந்திரசேகரம், சந்திரசேகரம் ஞானசௌந்தரி, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாசிலாமணி புஸ்பராணி, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கனகரத்தினம் மகேஸ்வரி, பாவிலு சந்தியோகு, மரியான் சரோரூபன் குருஸ், கனகரத்தினம் மகேஸ்வரி, வைத்தியலிங்கம் யோகரட்ணம், ஈஸ்வரன் உருத்திரா தேவி, துரைசிங்கம் ஈஸ்வரி, சிதம்பரப்பிள்ளை யோகராசா மற்றும் அரசியல் கைதியான தனது கணவனை விடுதலை செய்யக்கோரி எம்முடன் இணைந்து போராடிய ஆனந்தசுதாகர் யோகராணி, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜசிந்தா பீரிஸ், வவுனியா மாவட்டத்தை சேர்ந்த கந்தையா அரியரத்தினம், அரியதாஸ் புவனேஸ்வரி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அன்ரன் அல்பிரட், செபநாயகம் மரியமலர், செபஸ்ரியான்பிள்ளை ஆரோக்கியநாதன், ச.விஜயலட்சுமி, கோணமலை பொன்னம்பலம், வேலு சரஸ்வதி, செபமாலைமுத்து திரேசம்மா ஆகியோரின் இவை அமைப்பில் பதிவு செய்யப்பட்ட விபரங்கள் மட்டுமே மரணத்துடன், எமது உறவுகளை மீட்பதற்காக போராடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ள நிலையிலும் இலங்கை சிங்கள அரசாங்கமோ சர்வதேச சமூகமோ எமக்கான நீதியை விரைவில் பெற்றுத்தருவதற்கு முயலாமையினையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எமது போராட்டமானது எமது உறவுகளை மீட்டல், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அறிதல், நீதியை பெறல் என்பவற்றுடன் இனிவரும் காலங்களில் எமது சமூகத்திற்கு மட்டுமல்லாமல் மனித குலத்திற்கே இவ்வாறான பிரச்சினைகள் நிகழாதிருக்கவுமேயாகும். ஆயினும் எமது போராட்டமானது மிக கடினமானது.

மனித குலத்திற்கான நீதியானது நபர்களின் எண்ணிக்கை சார்ந்தோ (பெரும்பான்மை) பாதிக்கப்பட்டவர்களிடமுள்ள வளங்கள் சார்ந்தோ அல்லது நீதி வழங்குநர்கள் மற்றும் நீதி வழங்குநர்களின் பங்காளிகளின் தேவையின் அடிப்படையிலோ அமையுமெனின் அதன் பெயர் நீதியன்று. ஆயினும் இன்றைய காலத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நீதிப்பொறிமுறைகள் மேற்கூறப்பட்டதன் அடிப்படையில் இடம்பெறுவதாக நாம் உணர்ந்ததன் விளைவாக உளச்சோர்வுக்கும் நோய்களுக்கும் உள்ளாகி மரணத்தை தழுவிக்கொண்டிருக்கின்றோம்.

அரசாங்கங்களினால் உருவாக்கப்பட்ட காணாமல்போனோருக்கான அலுவலகம் , சிங்கள சார்பு நிலை உள்ளக நீதி நிறுவனங்கள் ஆகியன எமக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. பெற்றுக்கொடுக்கப்போவதுமில்லை என்பதுடன் கால தாமதங்கள் ஊடாக உறவுகளை தேடுபவர்களை உடல்.உள ரீதியாக பலவீனப்படுத்தி உயிரிழக்கவும் காரணமாக உள்ளன. அரசியல் பிரதிநிதிகளின் செயற்பாடுகளானது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யும் வகையிலல்லாது அரசியல் நலன்களுக்காக எமது பிரச்சினைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாறாக அவர்கள் பாரிய அழுத்தங்களை அரசாங்கத்தின் மீது பிரயோகித்து சர்வதேசத்தின் பங்களிப்புடனான நீதிப்பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

மேலும் உள்ளூர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் போன்று குறைகள் நிறைந்த காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தினை ஏற்றுக்கொள்ளுமாறு எம்மீது அழுத்தம் வழங்குவதனை நிறுத்தி எமக்கான நீதி விரைவில் கிடைக்கப்பெறுவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தமும் ஆலோசனையும் வழங்கவேண்டும்.

இவற்றில் ஏற்படும் தாமதங்களால், நாம் நேரடியாக சர்வதேச விசாரணையினைக்கோருகின்றோம். ஆயினும் சர்வதேச நிறுவனங்கள் மீதான நம்பிக்கைகளை குறைக்கும் வகையில் அவர்களாலும் காலதாமதம் செய்யப்படுவதோடு நீதி வழங்களில் அவர்களின் பங்களிப்பு மற்றும் இலங்கை சிங்கள அரசாங்கம் மீதான அழுத்தம் போதாதுள்ளதாக கருதுகின்றோம். ஆயினும் மக்கள் மயப்படுத்தப்படலூடாக எமது போராட்டம் வலுப்பெறுவதற்கும் அதனூடாக உறவுகளை மீட்கவும் விரைவாக நீதியைப் பெறவும் முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-281)

# வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலையின் 36வது ஆண்டு நினைவு நிகழ்வு





**வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப் போராட்டத்தின் ஸ்தாபகத் தலைவர்கள் தங்கத்துரை குட்டிமணி, போராளி ஜெகன் தேவன் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்ட வெலிக்கடை படுகொலைகளின் 36 ஆவது நாள் நினைவு தினம் வடக்கின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் வவுனியாவில் கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நூலகத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நினைவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதன் பின்னர் அஞ்சலி செலுத்தப்பட்டது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. குறித்த அஞ்சலி நிகழ்வில் அரசியல் கட்சி பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் ஏனைய பிரதிநிதிகள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.**

**(படங்கள்: பனிக்கன்குளம், நெடுக்குளம் செய்தியாளர்கள்)**

# ஆப்கான், ஈராக்கில் பணியாற்றிய அதிகாரியை ஆலோசகராக நியமித்தது அமெரிக்கா



(கொழும்பு)

ஆப்கானிஸ்தான், ஈராக், கொசோவோ ஆகிய மோதல் பிரதேசங்களில் பணியாற்றிய அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த லெப்.கேணல் ட்ராவிஸ் கொக்ஸ், இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்கத் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட லெப்.கேணல் ட்ராவிஸ் கொக்ஸ், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்தார்.

அவருடன், பிரதி பாதுகாப்பு ஆலோசகர் கரின் கிளெய்ஸ்னரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

இரு அதிகாரிகளும் பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

அமெரிக்கத் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட லெப்.கேணல் ட்ராவிஸ் கொக்ஸ், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பிராந்தியத்தில் பல்வேறு கட்டளை மற்றும் செயலக பொறுப்புக்களை வகித்தவர்.

ஆப்கானிஸ்தான், ஈராக், கொசோவோ ஆகிய இடங்களில் படை நடவடிக்கைகளில் பங்கேற்றவர்.

மலேசியா, இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களிலும் பணியாற்றியவர்.

லூசியானாவின் போர்ட் போல்கிலுள்ள கூட்டு தயார்நிலை பயிற்சி மையத்தில், இடைத் தொடர்பு மற்றும் இயங்குதன்மைப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்த நிலையில் கொழும்பில் உள்ள தூதரகத்தில் புதிய பணிக்கு அமர்த்தப்பட்டார். (இ-7)

# எஸ்.பி.திஸாநாயக்க, டிலான் பெரேரா நாய் வாலைப் போன்றவர்கள்

## துமிந்த விமர்சனம்

(கொழும்பு)

எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் டிலான் பெரேரா போன்றவர்கள் நாய் வாலைப் போன்றவர்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி. விமர்சித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்று செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகவும் சிறிய கட்சிகளுடன் இணைந்து கூட்டணி உருவாக்கி வருகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் குமார வெல்கம போன்ற கட்சியின் சிரேஷ்ட முக்கிய புள்ளிகள் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

எஸ்.பி. திஸாநாயக்க, டிலான் பெரேரா போன்றவர்கள் சுதந்திரக் கட்சியின் மீது செய்து வரும் விமர்சனங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது, இந்த இருவரும் நாய் வாலைப் போன்றவர்கள் எனவும் அவர்களை திருத்த முடியாது எனவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவுடன் ஏற்கனவே கூட்டிலிருந்த 8 கட்சிகளுடனே உடன்படிக்கை

## நளினுக்கு அமுனுகம பதில்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் உடன்படிக்கை செய்து கொண்ட 10 கட்சிகளில் 8 கட்சிகள் ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணைந்திருந்தவை என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கு இப்போது தான் இந்த உண்மைகள் கண்களுக்குத் தெரிகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சிறு கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்ததனால்தான் இவ்வாறு ஒப்பந்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும், எம்முடன் இருந்திருந்தால் ஒப்பந்தமொன்றுக்கு அவசியமிருந்திருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து மீது கல் வீச்சு



(கல்முனை)

கல்முனை பகுதியிலிருந்து அன்னமலை பகுதியை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நற்பிட்டிமுனை கிட்டங்கி வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை தனியார் பேருந்தில் அதிகளவான மக்கள் பயணம் செய்த போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1790


## வினய்

ஒருவன் எப்படிப்பட்டவன் என்பதை பழகித் தான் முடிவு செய்யவேண்டுமே தவிர அடுத்தவர் சொல்வதைக்கேட்டு முடிவு செய்யக்கூடாது



## பரதன்

எவ்விதக் கூச்சமுமின்றி உரிமையாய் அப்பாவிடம் காசு கேட்டதைப்போல் அப்பா நம்மிடம் கூச்சமின்றிக் கேட்கும்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் போதும்



## கிருசாந்த்




## ராம்குமார்



பசி என்பது ஒரு உணர்வு தான். ஆனால் பணம் இல்லாத போது ஏற்படுகின்ற போது பசி அவமானமாகி விடுகிறது

## கஸ்தூரி

பொய்யைச் சொல்லி ஆயிரம் உறவுகளைத் தக்க வைப்பதைவிட உண்மையைச் சொல்லித் தனிமரமாகவே இருப்பது மேல்... மனச்சாட்சி மட்டுமாவது கடைசிவரை இருக்கட்டும்



## விவேகா

மனசுக்குப் பிடிச்சவ மொடனாக இருக்கனும்னு இல்ல.. மாடு மேய்க்கிறவளா இருந்தாலும் மகிழ்ச்சியாக ஏத்துப்பன்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டு நீலிக்கண்ணீர் வடிக்கும் கூட்டமைப்பினர்

## நாடாளுமன்றில் அங்கஜன் சாடல்

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் நழுவ விட்டு விட்டு இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடுமையாகச் சாடினார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை கொண்டு வந்து மற்றுமொரு கண்கட்டு வித்தையை நாடாளுமன்றத்தில் அரங்கேற்ற முற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு சவால்கள் வந்தபோதெல்லாம், தோள் கொடுத்தபோது நினைவுக்குவராத புதிய அரசியலமைப்பின் தேவை, தேர்தல் காலங்களில் மாத்திரம் நினைவுக்குவருகின்றது. நோய்க்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் சிறந்த மருந்தளிப்பார்கள்.

நல்லாட்சி எனும் மாயவார்த்தை கூறி, அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றியவர்கள், தேர்தல் காலம் நெருங்கும் போது, புதிய தலைப்புக்களை தேடுவது நகைப்பாக உள்ளது.

அத்துடன் புதிய அரசியலமைப்பு திருத்தமொன்றை கொண்டு வருவதற்கான உண்மையான தேவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்திருந்தால், 19 ஆவது திருத்தத்தை 100 நாட்களில் நிறைவேற்றியது போன்று, புதிய அரசியல் திருத்தத்தையும் கொண்டு வந்திருக்கலாம். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாகத் தான் ஆட்சியிலிருந்தன,

எம் மக்களுக்கு நிறைவேற்றுவோம் என வாக்குறுதியாய் கொடுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும், அவர்கள், வக்காளத்து வாங்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இதைக்கொண்டு வருவதற்கு நேர்மையான நோக்கம் இருக்கவில்லை.

முதலில் முழுமையான திருத்தங்களை கொண்டுவருவோம் எனச்சொல்லியவர்கள், அதைச் செய்ய முடியாவிட்டாலும் சிறுபான்மையினருக்கு தேவையான அடிப்படை திருத்தங்களையேனும் கொண்டு வந்திருக்கலாமே? அன்று, இவற்றை கொண்டு வந்திருந்தால் நாம் கட்சிபேதமின்றி ,இரு கரம் தூக்கி ஆதரவளித்திருப்போம்.

அரசாங்கத்துக்கு நெருக்கடி வந்த காலங்களில் கை கொடுக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவ்வேளைகளில் அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ள உரிய அழுத்தத்தை கொடுத்திருந்தால், அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கலாம்.

ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தையெல்லாம் நழுவவிட்டுவிட்டு, முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலயம், கல்முனை பிரதேச செயலக தரமுயர்வு உள்ளிட்ட பல விடயங்களில், தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது மௌனம் காத்து, என்றும் அரசாங்கத்தின் துதியை மட்டுமே பாடிக் கொண்டிருந்தனர் என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு சர்வதேசத்தின் ஆதரவு தேவை எனக்கூறும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, இன்று சர்வதேசத்தின் தேவைகளை நிறைவேற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்கிய போதும், சர்வதேசம் தமிழர்களின் தீர்வு குறித்து, இந்த அரசிற்கு எந்தவொரு அழுத்தங்களையும் கொடுக்காமை மூலம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பூகோள அரசியல் ஞானம் நன்கு தெளிவாகிறது.

இந்த நாட்டுமக்களை அடிமையாக்கி, எங்களின் இறைமையை விற்கும் அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்குபவர்கள், கொண்டுவரும் அரசியலமைப்பு மீதான விவாதம், இந்த அரசாங்கத்தினதும் கூட்டமைப்பினதும் இயலாமையே!

வரவு-செலவுத் திட்டம், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்தவர்களிற்கு எஞ்சியது கம்பரெலிய மட்டுமே. தமிழ் மக்கள், தமது அபிலாசைகளை நேர்மையாகவும், இதய சுத்தியுடனும் செய்வார்கள் என நம்பி அனுப்பியவர்கள், அரசின் செல்லப்பிள்ளைகளாக சொகுசு வாழ்க்கைக்காக,தம்மையும், எம் மக்களின் அபிலாசைகளையும், இந்த அரசிடம் அடகு வைத்து விட்டனர் என்ற வேதனையில் வாழ்கின்றனர்.

சிறு வீதிகளின் திருத்தத்தை நம்பியா தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள்? என கேட்க விரும்புகின்றேன்,

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையான நோக்கம் இருந்திருந்தால், ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு பின் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில், தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் பேரில், ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கியமையினால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவை இழந்தனர்.

ஆனால் அப்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடுநிலைமை வகித்திருந்தால், அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவாய்ப்பு இருந்தது. அந்தநேரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத ஒரு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியமையால், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான கனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் அமைப்பு சீர்திருத்த தேர்தல் வாக்குறுதியும் கலைந்தது.

அரசியல் திருத்தம் குறித்து கதைக்கும் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், அண்மைக்காலமாக , சாத்தியமில்லை என்பதை தாமே கூறி விட்டு தற்போது இது குறித்து வீர வசனம் பேசுகின்றனர். அரசியல் திருத்தத்தை நிறைவேற்ற முடியாது போனமையால், தமது, இராஜினாமாக் கடிதத்தின் இறுதிப் பகுதியை எழுதிக்கொண்டிருக்கின்றேன் எனக் கூறியவர்கள், இன்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கின் பிரதிநிதியாக பாதிக்கப்பட்ட பிரதேசம், நலிவுற்ற மக்களின் நலன் கருதி பிரயோக அரசியலை நான் முதன்மைப்படுத்தியிருந்தேன்.

ஆனால், நான் ஒருபோதும் அரசியல் சீர்திருத்தத்துக்கு இடையூறாக இருந்ததும் இல்லை, இருக்கப்போவதும் இல்லை: இன்று வரையிலும் காலங்களை கடத்தாமல் தமிழர்கள் நலன் சார்ந்து வென்றெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து, ஒன்றிணைந்து பலத்தைப் பிரயோகிக்கத் தயாராகவே இருக்கின்றேன். அதற்கான அறைகூவலையும் பல தடைவ விடுத்திருக்கின்றேன்.

ஆனால் தனிப்பட்ட அரசியல் பழி வாங்கல்களுக்கு, தமது அழுத்தத்தை பயன்படுத்தியவர்கள், ஏன் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவில்லை என்பது தான் அனைவரதும் கேள்வியாக இருக்கின்றது.

எமது அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை, சாணக்கியமான முறையில் நாம் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும். ஆனால், அத்தனை சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டு, இன்று இந்தச் சபையில் நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்,

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் மக்களை ஏமாற்றவும், முன்வைத்த ஒத்திவைப்பு விவாதம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மிகப்பெரிய அரசியல் நாடகம் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மாகாணசபைத் தேர்தலை நடத்த ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது

## முன்னாள் முதலமைச்சர் எதிர்ப்பு

(ஏறாவூர்)



சிறுபான்மையினருக்குப் பெரும் பாதிப்பைத் தரக்கூடிய புதிய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற இருக்கும் சாத்தியப்பாடுகள் குறித்து முன்னாள் முதலமைச்சரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாண சபைத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், இதற்காக உயர்நீதிமன்றம், சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆகியோர்களிடம் ஜனாதிபதி யோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் ஜனாதிபதி விரும்பும் புதிய முறைமையில் தேர்தலை நடத்துவது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது விடயத்தில் சிறுபான்மை கட்சிகள் கவனமாகச் செயற்படவேண்டும்.

கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய தேர்தல் முறையின் மூலமாகக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளை சிறுபான்மைக் கட்சிகள் தெளிவுபட அறிந்து, அவற்றின் சாதக பாதகங்களை விளக்கி மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறைமையின் (விகிதாசார தேர்தல்) கீழ் நடத்த வேண்டும் எனக் கோரியிருந்தன.

அதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டு வந்த நிலையில் திடீரென புதிய முறையில் தேர்தலை நடத்துவது என எடுக்கும் தீர்மானம் வரவேற்கத்தக்கதல்ல.

ஒருவேளை இவ்வாறு புதிய முறையில் மாகாண சபைத் தேர்தல் நடக்குமானால் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட புதிய தேர்தல் முறைக்கான பிரேரணைக்கு ஆதரவாக ஆட்சியைக் காப்பாற்றுகின்றோம் என்ற கோதாவில் கைதூக்கியவர்கள் அனைவரும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அதன் பெறுபேறுகள் எத்தகைய அவலங்களை சபை நடவடிக் கைகளில் ஏற்படுத்தி உள்ளன என்பதை யாவரும் அறிவர்.

முற்றுமுழுதாக தோல்வியுற்ற ஒரு தேர்தல் முறைமை அது என்புதை அனைத்து அரசியல்கட்சிகளும் அரசியல் வாதிகளும் ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் பிரதமர் இது விடயத்தில் மேற்கொண்ட நழுவல்போக்கும் உதா சீனங்களும் காலதாமதங்களும் திருப்தி தருவனவாக அமையவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி மட்டும் புதிய தேர்தல் முறைமையை தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதன் மர்மமும் புரியவில்லை.


இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களின் கோரிக்கைகள் அவ்வப்போது உதாசீனம் செய்யப்பட்டு வரும் நிலையில் அவர்களது பிரதிநிதித்துவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை நாம் கைகட்டிபார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே இது விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 50 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 300 | 140 | 220 | 400 |
| தக்காளி | 100 | 90 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 100 | 120 |
| கோவா | 80 | 70 | 50 | 80 |
| கரட் | 140 | 140 | 100 | 200 |
| பூசணி | 80 | 60 | 50 | 60 |
| புடோல் | 70 | 50 | 30 | 120 |
| வாழைக்காய் | 130 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 90 | 160 | 90-100 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 70 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 50 | 100 |
| கறிமிளகாய் | 140 | 200 | 150 | 240 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 60 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 70 | 60 |
| கீரை - 1பிடி | 15 | 20 | 15 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 22-25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 240 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 160 | 240 |
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 120 | 60 |




# வம்பை விலைக்கு வாங்கிய அரண்மனை அதிகாரி



ஒரு நாட்டில் தந்திலன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான். தந்திலன் செல்வச் செழுமையும் சிறந்த அறிவும் நல்ல தகுதியும் பெற்றவனாக இருந்தான். மக்களிடமும் அவனுக்கு நன்மதிப்பு இருந்தது. அந்த நாட்டின் மன்னரிடம் நல்ல செல்வாக்கையும் பேராதரவையும் பெற்ற அவன் மன்னருடைய கருவூலத்துக்கும் அதிகாரியாக இருந்தான்.

ஒருநாள் தந்திலன் தன்னுடைய மகள் திருமணத்தை மிகவும் சிறப்பாக நடத்தினான். திருமணத்துக்கு மன்னரும் அரசியாரும் முக்கிய விருந்தினராக வந்து சிறப்பித்தனர். தந்திலனின் அழைப்பை ஏற்று அரசாங்க அதிகாரிகளும் சிப்பந்திகளும் பொது மக்களும் திருமண விழாவுக்கு திரளாக வந்திருந்தனர்.

திருமணத்திற்கு வந்திருந்தவர்களில் அரண்மனையைப் பெருக்கிச் சுத்தப்படுத்தும் பணியாளனான கோரபன் என்பவனும் வந்திருந்தான். அவன் தன்னைப் போன்ற சிப்பந்திகளுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமராமல் அமைச்சர்கள் போன்ற அந்தஸ்துமிக்கவர்களுக்காகப் போடப்பட்டிருந்த ஆசனம் ஒன்றில் சென்று அமர்ந்து கொண்டான்.

அதைக் கண்ட தந்திலன் கோரபனிடம் சென்று அவனுக்கு உரிய ஆசனத்தில் சென்று அமருமாறு கேட்டுக் கொண்டான். கோரபன் தான் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க மாட்டேன் என்று வீம்புக்காக அடம் பிடித்தான். நியாயமாகப் பல தடவை சொல்லியும் கோரபன் கேட்காததால் தந்திலன் தன் ஏவலாளரை விட்டு பலாத்காரமாக ஆசனத்தை விட்டுக் கிளப்பி வெளியே துரத்திவிட்டான்.

அந்தக் காட்சியைக் கண்டு திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் கைகொட்டிச் சிரிக்கலானார்கள். கோரபனுக்கு அவமானமாகப் போய்விட்டது. தன்னைப் பலர் முன்னிலையில் கேவலப்படுத்திய தந்திலனை எவ்விதமாவது பழி வாங்கித் தீர்வது என்று மனத்திற்குள் தீர்மானித்து அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

திருமண நிகழ்ச்சி நடைபெற்ற மறுநாள் அதிகாலையில் கோரபன் அரண்மனையைப் பெருக்கி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தான். மன்னரின் படுக்கை அறையைச் சுத்தம் செய்ய வந்தவன் உள்ளே மன்னன் மட்டும் படுக்கையிலிருந்து எழாமல் அரைத் தூக்கத்திலிருப்பதைக் கவனித்தான்.

படுக்கையறையின் வெளிப்புறத்தைச் சுத்தம் செய்யும் போது மன்னன் காதில் விழும் வகையில் அவன் கீழ்க்கண்டவாறு முனகிக் கொண்டான். இந்த தந்திலனை மன்னர் எவ்வளவு தூரம் நம்பி அரண்மனைக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்ல அனுமதிக்கிறார்.

ஆனால் அந்த மூடனோ மன்னருடைய பெருந்தன்மைக்கு இழுக்கு தேடும் விதத்தில் மகாராணியாரை மானபங்கப்படுத்த முயலுகிறான் என்ன கேவலம்.

இந்தச் சொற்கள் மன்னரின் காதில் தெளிவாக விழவே அவர் திடுக்கிட்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு கோரபனை அழைத்தான். கோரபன் வந்து பணிந்து நின்றான்.

இப்போது என்ன சொன்னாய் ? என்று மன்னன் கேட்டான்.

எஜமான் நான் ஒன்றும் சொல்லவில்லையே. நேற்று இரவு சற்று அதிகமாக மது அருந்திவிட்டேன். இன்னும் சரியாக மயக்கம் தெளியவில்லை. ஒரு அரைகுறை மது போதையில் ஏதாவது உளறினேனோ என்னவோ நான் ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் எசமான் மன்னிக்க வேண்டும் என்று தந்திரமாகக் கூறினான். மன்னர் கோரபனை அனுப்பிவிட்டார். ஆனால் அவன் சொன்ன விஷயங்கள் அவர் மனத்தைக் குடையத் தொடங்கின.

அரண்மனையில் எங்கு வேண்டுமானாலும் செல்ல தந்திலனுக்கு மன்னவர் உரிமையளித்திருந்தார். ஆகவே அந்தப்புரத்திற்குச் சென்று தந்திலன் தமது மனைவியைச் சந்திப்பதுகூட சாத்தியம்தான். ஏதோ நடக்காமலா கோரபன் அந்தச் தகவலைச் சொல்லியிருக்க முடியும் என்று மன்னர் கொதிப்படைந்தார்.

தந்திலன் மீது அவருக்கு கடுங்கோபம் ஏற்பட்டது. அதே சமயம் தமது மனைவியைப் பற்றியும் அவநம்பிக்கை எண்ணங்கள் அவர் மனத்தில் அலை மோதத் தொடங்கின. பெண்களை ஒருபோதும் நம்பக்கூடாது என்று முன்னோர் தெரியாமலா சொல்லி வைத்தார்கள். பெண்கள் எப்போதும் சஞ்சல சுபாவம் உள்ளவர்கள் தானே.

கணக்கு வழக்கின்றி விறகைப் போட்டுக் கொண்டிருந்தாலும் நெருப்புக்குத் திருப்தி ஏற்படுவது இல்லை. ஆயிரக் கணக்கில் ஆறுகள் சென்று கலந்தாலும் கடலுக்கு நிறைவு ஏற்படாது. கோடிக்கணக்கில் உயிர்களை அபகரிப்பினும் யமனுடைய மனது நிறைவு பெறுவது இல்லை.

இதே போல் எத்தனை ஆடவர்களிடம் தொடர்பு வைத்துக் கொண்டாலும் பெண்களுக்கு முழுமையான திருப்தி ஏற்படாது போலும்.

தன் மனைவி தன்னை மட்டுமே காதலிக்கிறாள் என்று மனப்பூர்வமாக நம்புகின்ற ஒருவனைப் போல முட்டாள் உலகத்தில் இருக்கவே முடியாது.

மன்னர் இவ்வாறெல்லாம் எண்ணியெண்ணி மனம் நொந்து நிம்மதி இழந்தார்.

உடனே தனது காவலர்களை விளித்து இனி தந்திலன் அரண்மனைக்கு வந்தால் அவனை உள்ளே பிரவேசிக்க அனுமதிக்காதீர்கள் என்று உத்தரவு போட்டு விட்டார்.

மறுநாள் காலை வழக்கப்படி தந்திலன் அரண்மனைக்கு வந்தபோது காவலர்கள் அவனைச் சற்றே அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தி விட்டனர்.

என்ன காரணம்? என்று திடுக்கிட்டவனாக தந்திலன் கேட்டான்.

காரணம் எங்களுக்கு தெரியாது. உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்.

அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும் என்று காவலர்கள் கூறி விட்டனர்.

தந்திலன் என்ன யோசித்தும் தாம் மன்னர் மனம் நோகச் செய்த குற்றம் என்ன என்று விளங்கவில்லை.

நாம் என்ன தவறு செய்தோம் என மனக்குழப்பத்தோடு திரும்பத் திரும்ப யோசித்த வண்ணம் அரண்மனை வாசலிலேயே சற்று நேரம் நின்றான் என்றான்.

## நம்மை உயர்த்தும் ஏழு விடயங்கள்

- ஏழ்மையிலும் நேர்மை.
- கோபத்திலும் பொறுமை.
- தோல்வியிலும் விடாமுயற்சி.
- வறுமையிலும் உதவி செய்யும் மனம்.
- துன்பத்திலும் துணிவு.
- செல்வத்திலும் எளிமை.
- பதவியிலும் பணிவு.

## விடுகதைகளும் விடைகளும்

- தங்கை தீட்டிய ஓவியம் தரையில்தான் தவழும். அது என்ன?
  **கோலம்**
- தட்டத் தட்ட தகடு. காயக் காய விறகு. அது என்ன?
  **எருக்கட்டி**
- ஆழக் கிடப்பவன் கைக்கு வந்தால் ஆயிரம் மதிப்பு. அது என்ன?
  **முத்து**
- வாய் திறக்காமல் தகவல் சொல்வான். அவன் யார்?
  **தபால்**
- உலகே எதிர்பார்க்கும் அவன் வரவை. அவன் யார்?
  **மழை**

## கடிஜோக்ஸ்

- **ரமேஷ் :** எத்தனை பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தாது.
  **சுரேஷ் :** ஏன்?
  **ரமேஷ் :** யானை பிளிறும்! குதிரை கனைக்குமே!
- **ரமணன்:** பாப்பா, இந்த டிரஸ் தீபாவளிக்கு எடுத்ததா..?
  **பாப்பா :** இல்ல, என க்கு எடுத்தது...

வீழ்வது நாமாக இருப்பினும்;
வாழ்வது தமிழாக இருக்கட்டும்.
மு.கருணாநிதி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் மக்கள் பேரவை எடுத்த சரியான தீர்மானம்

தமிழ் மக்களின் இயக்கமாகப் பரிணமித்த தமிழ் மக்கள் பேரவை; சரியான நேரத்தில் சரியான தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது.

தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் தோற்றம் பெற்றதன் அடிப்படையில் போருக்குப் பின்பாக, தமிழ் இனத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவல்ல அத்தனை அமைப்புக்களும் ஒன்றுபடுகின்ற பெருவாய்ப்பு உருவாகியது.

அந்த அடிப்படையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டது. இதன் காரணமாக தமிழ் மக்கள் தத்தம் உரிமைக்காகத் தொடர்ந்து அகிம்சை வழியில் போராட வேண்டியவர்களாக உள்ளனர் என்ற உண்மை உணர்த்தப்பட்டது.

ஆம், தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் அனைத்துப் பொதுஅமைப்புகளையும் பொதுமக்களையும் ஒன்றுதிரட்டி நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தமிழ் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியதுடன் போருக்குப் பின் நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற மனநிலையை மாற்றி, தமிழினம் தோற்ற இனமோ அன்றி அடிமைப்பட்ட இனமோ அல்ல.

தமிழினம் தொடர்ந்தும் தனது உரிமைக்காக ஒன்றுபட்டுப் போராட வேண்டும். அப்போது தான் இந்த மண்ணில் தமிழினத்தின் இருப்பை நிலைநிறுத்த முடியும் என்ற உத்வேகத்தை வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் பேரவை நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி கொடுத்தது.

எனினும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று நாம் யாரை நம்பினமோ அவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டனர்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற கொடுமைகளையும் தமிழினத்துக்குத் தரவேண்டிய உரிமைகளைத் தர மறுக்கின்ற கயமைத்தனங்களையும் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளது.

தவிர, காணாமல்போனவர்களின் நிலைவரம், தமிழ் அரசியல் கைதிகளின் அவலம், நாளாந்தம் நடக்கின்ற பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு என்பன தொடர்பில் தமிழ் மக்கள் தங்களின் மனக் கொதிப்பை வெளிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறானதொரு தேவைப்பாட்டின் அடிப்படையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி தமிழர் தாயகம் ஒன்றுபட்டு அனைத்து தமிழ் மக்களையும் ஒன்றுசேர்த்து மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியை நடத்துவதென தமிழ் மக்கள் பேரவை எடுத்த தீர்மானம் உண்மையில் காலம் உணர்ந்து எடுக்கப்பட்ட சரியான தீர்மானமாகும்.

தமிழ் மக்களின் இயக்கமாக இருக்கின்ற தமிழ் மக்கள் பேரவையின் மாபெரும் எழுச்சிப் பேரணிக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னிறுத்தி நிற்கும் தமிழ் அரசியல் கட்சிகள்; பொதுஅமைப்புகள் என அனைவரும் ஒன்றுபட்டு எம் தமிழினத்தின் ஒற்றுமையை உலகுக்கு உணர்த்த முன்வர வேண்டும்.

செப்ரெம்பர் 7இல் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியின் வீறு கண்டு, சர்வதேசம் தன் பார்வையை இலங்கைத் தமிழர்கள் மீது திருப்பட்டும். இலங்கை அரசுக்கும் கடும் அழுத்தம் கொடுக்கட்டும். எல்லாம் நின்றே நடக்கும்.

# ரணிலையும் இணைத்தே அடுத்த ஆட்சி; உறுதியாக கூறுகிறார் ராஜிதசேனாரத்ன

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறவுள்ளதோடு, நாம் பரந்துபட்ட கூட்டணியை அமைத்து புதிய வேட்பாளரை நிறுத்தவுள்ளோம். எமது தரப்பில் வேட்பாளர் குறித்து பிரச்சினைகள் இல்லை. கரு, சஜித், நான், சம்பிக்க என நீண்ட பட்டியல் உள்ளது. எவ்வாறாயினும் எமது அடுத்த ஆட்சி ஞானம் நிறைந்த தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்ததாகவே அமையும் என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார். அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு,

* கேள்வி:-இடதுசாரித்துவ கொள்கையுடனும் போராட்டத்துடனும் ஆரம்பித்த உங்களின் அரசியல் பயணம் தற்போது எவ்வாறுள்ளது?

பதில்:-காலமாற்றத்துக்கு ஏற்ற வகையில் போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருகின்றது.

* கேள்வி:-அரசாங்கத்தில் அங்கததுவம் வகிக்கும்போது உங்களின் போராட்டக்குரல் அதிகம் மேலெழுவதில்லையே?

பதில்:-அரசிலோ அல்லது எதிர்க்கட்சியிலோ எங்கிருந்தாலும் கொள்கைக்காகவே எனது போராட்டம் இருக்கின்றது.

* கேள்வி:-மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக களமிறங்கியபோது அவர் குறித்து பல சான்று உறுதிகளை வழங்கியிருந்த நீங்கள் அவருடைய போக்கில் மாற்றங்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறியவில்லையா?

பதில்:- அவருடைய போக்கில் மாற்றம் ஏற்பட்டதை நான அவதானித்தேன். அவருடன் இருந்த நெருங்கிய நட்பின் காரணமாக அவருடைய பாதையில் நானும் இணைவேன் என்று அவர் நம்பிக்கை கொணடிருந்தார். எனினும் எனது அரசியல் கொள்கையை கைவிட்டு நட்புக்கு முதலிடம் அளிக்க நான் விரும்பவில்லை. அத்துடன் நிறுத்தாது அவருடைய தவறான போக்குக்கு எதிராக நானே முன்னிலை வகித்து போராடினேன். நாம் இருவரும ஆரம்பித்த பயணத்தின் பாதையில் இடைநடுவில் ஜனாதிபதி மைத்திரி நின்றுவிட்டார். நான் தொடர்ந்துகொண்டிருக்கின்றேன்.

* கேள்வி:- ஒக்டோபர் 26 இல் ஆட்சியை மாற்றுவது குறித்து உங்களுடன் ஜனாதிபதி மைத்திரி பேசியிருந்தாரா? அதுபற்றி தாங்கள் ஏதாவது அறிந்திருந்தீர்களா?

பதில்:- என்னுடன் அவர் எதுவும் பேசவுமில்லை. அவ்வாறானதொரு விடயம் நடக்க விருப்பதை நான் அறிந்திருக்கவுமில்லை.

* கேள்வி:- முதலில் எந்த தேர்தலுக்கு முகங்கொடுக்க தயாராகி வருகின்றீர்கள்?

பதில்:- எந்த தேர்தல் நடைபெறாது விட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அதற்கு முகங்கொடுக்க தயாராகவே உள்ளோம்.

* கேள்வி:- உங்களுடைய தரப்பிலும் பரந்துபட்ட கூட்டணி பற்றி பேசப்படுகின்றதே? அதற்கான சாத்தியப்பாடுகள் எவ்வாறுள்ளன?

பதில்:- பரந்துபட்ட கூட்டணியை அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் அடையாளத்தில் எம்முடன் இணைந்து கொள்வதற்கு விருப்பமற்றவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே தான் நாம் புதிய பெயரில், பொதுச் சின்னத்தில், புதிய கொள்கையில் கூட்டணியை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். அதில் இணைவதற்கு பல தரப்புக்கள் முன்வந்துள்ளன.

* கேள்வி:- கூட்டணியில் சுதந்திரக்கட்சியின் தரப்பினரும் இணையவுள்ளனரா?

பதில்:- அத்தரப்பிலும் பலர் இணையவுள்ளார்கள். அக்கட்சியின் உறுப்பினர்கள், தொழிற்சங்கத்தினர், சிவில் அமைப்புக்கள் எனப் பலர் முன்வந்துள்ளனர்.

* கேள்வி:- சுதந்திரக்கட்சியின் தரப்புக்கள் இணைவதால் மீண்டும் முரண்பாடுகள் ஏற்படாதா?

பதில்:- கடந்தமுறை போன்று இரண்டு கட்சிகளாக இணையவில்லை. ஒரு தலைமை,சின்னம், கொள்கையின் கீழ் தான் அவர்கள் கைகோர்க்கவுள்ளனர்.

* கேள்வி:- ஐ.தே.க.தனது கொள்கையை கைவிட்டு பொதுக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுமா?

பதில்:- ஐக்கிய தேசியக் கட்சி 1977இலிருந்து ஒரே கொள்கையின் கீழ் இருந்திருக்கவில்லையே. காலத்திற்கேற்ற வகையில் அதன் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

* கேள்வி:- எவ்வாறாயினும் கூட்டணியில் ஐ.தே.க.வே பிரதான கட்சியாக இருககப்போகின்றதே?

பதில்:- ஐ.தே.க.வின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஐ.தே.கவாக செயற்பட்டுத் தேர்தல்களில் வெற்றி பெறமுடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தான் கூடடணி அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மகிந்த தரப்பிலும் கூட்டணியே களமிறங்கும். யாராலும் தனித்து செயற்பட்டு வெற்றி பெற முடியாது. பூகோள சூழலிலும் கூட்டணிகளே ஆட்சியமைக்கும் நிலைமைகள் அதிகரித்துள்ளன.

* கேள்வி:- புதிய கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகியவற்றை இணைத்துக் கொள்வது பற்றி கரிசனை கொண்டிருக்கின்றீர்களா?

பதில்:- கூட்டமைப்பு கூட்டணியில் இணையாது விட்டாலும் அவர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கு விழைவோம். அதே போன்று ஜே.வி.பியும் எம்முடன் இணையாது விட்டாலும் ராஜபக்ஷ தரப்பையா எம்மையா ஆதரிப்பது என்ற தெரிவொன்றை மேற்கொள்ள வேணடியேற்படும்.

* கேள்வி:- கூட்டமைப்பு தற்போதைய அரசாங்கத்தினை பல சந்தர்ப்பங்களில் பாதுகாத்திருக்கின்ற போதும் தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. இந்நிலையில் உங்களின் புதிய கூட்டணி மீது நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று எந்த அடிப்படையில் தமிழ் மககளை மீண்டும் கோருவீர்கள்?

பதில்:- ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இருந்த நிலைமைகளையும் தற்போதுள்ள நிலைமைகளையும் பார்க்கின்றபோது பாரிய இடைவெளிகள் ஏற்பட்டுள்ளதை மக்களே அறிவார்கள். அரசாங்கத்துக்கு எதிராக, தமிழ் தலைவர்களுக்கு எதிராக போராடுகிறார்கள். நாம் ஜனநாயக வெளியை ஏற்படுத்துவதற்கு போராடினோம். அதன்மூலம் கிடைத்த பிரதிபலிப்புக்களே இவையாகின்றன என்பதை நினைக்கும் போது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

* கேள்வி:- ஜனநாயக வெளி ஏற்பட்டது என்பதற்கு அப்பால் வாழ்வியல் பிரச்சினைகளை முன்வைத்து போராடும் மக்களுக்கான தீர்வு என்ன?

பதில்:-புதிய அரசியலமைப்பு, காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, உள்ளிட்ட பல விடயங்கள் பகுதியளவில் இருக்கின்றன. அவற்றை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். காணாமல்போனவர்கள் பற்றிய அலுவலகமும் முழுமையடையவில்லை. காணாமல்போனவர்கள் மரணித்துவிட்டார்கள் என்று சான்றிதழ் வழங்க முடியாது. அவ்வாறு வழங்கினால் அவர்கள் மீண்டு வருகின்ற போது பிறப்புச்சான்றிதழை வழங்குவதற்கு உலகத்தில் எங்குமே சட்டமில்லை. அதுவொரு சிக்கலான விடயமாக இருக்கின்றது. ஆனால், அதற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

* கேள்வி:- இந்தவிடயங்களுக்கு தீர்வு வழங்குவதாக பல தடவைகள் கூறப்பட்டுள்ள போதும் நடைமுறைச்சாத்தியமாகவில்லையே?

பதில்:- எமது கூட்டணி ஆட்சியில் அமர்கின்றபோது குழப்பங்கள் ஏற்படுவதற்கு வாய்பபில்லை. ஆகவே எமது காலத்தில் இந்த விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அதற்காக இறுதிவரையில் நான் பாடுபடுவேன் என்று பொறுப்புடன் உறுதியளிக்கின்றேன்.

* கேள்வி:- ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் வகிபாகத்தினையும் கருத்தில் கொள்ள வேண்டியேற்படுமல்லவா?

பதில்:- ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் செயற்பாடுகளே அத்தரப்பின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும். கூட்டமைப்புக்கு எதிராக தீர்மானம் எடுப்பதாக நினைத்து தவறாகச் செயற்பட்டார்களாயின் அவர்களே மரணத்தினை தேடிச்செல்லும் நிலைமையையே ஏற்படுத்திவிடும்

* கேள்வி:- முஸ்லிம் தரப்புக்களின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படும் என்று கருதுகின்றீர்களா?

பதில்:- இல்லை. அவர்கள் எம்முடனேயே இருக்கின்றார்கள். மேலும் ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர் அந்த மக்கள் மீது மேற்கொண்ட வன்முறைகள் மூலம் அவர்கள் தெளிவான நிலைப்பாட்டிற்கு வந்துள்ளார்கள்.

* கேள்வி:- பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறக்கப்படுவார் என்று கருதுகின்றீர்கள்?

பதில்:- கோத்தபாயவை கூறுகின்றார்கள். சமலைக் கூறுகின்றார்கள். மகிந்தவுக்கும், நாமலுக்கும் போட்டியிட முடியாது. இல்லாவிட்டால் அவர்களையும் கூறுவார்கள். சிரந்தியையும் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து தான் தெரிவு இருக்கப்போகின்றது. ஏனையவர்கள் அந்தக் குடும்பத்தினருக்கு காலம்பூராகவும் தேங்காய் துருவிக்கொண்டிருக்க வேண்டியது தான்.

* கேள்வி:- உங்களுடைய தரப்பில் யார் களமிறங்கவுள்ளார்?

பதில்:- ரணில் விக்கிரமசிங்கவுக்கு ராஜபக்ஷ போன்று பரம்பரை அல்லது குடும்ப அரசியல் செய்ய வேண்டியதில்லை. எமது அணியில் கரு, சஜித், நான்(ராஜித) சம்பிக்க என பல தெரிவுகள் இருக்கின்றன. சாதாரண குடும்பத்திலிருந்து ரணசிங்க பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கியது முதல் விவசாயியின் மகனையும் எமது தரப்பு தான் அரியாசனத்தில் அமரவைத்தது. அது தான் எமது தரப்பின் முன்மாதிரித்துவம்.

* கேள்வி:- பொதுஜன முன்னணி, சுதந்திரக்கட்சி கூட்டிணைந்தால் அது உங்களுக்கு சவாலை ஏற்படுத்துமா?

பதில்:- இந்த இரண்டு தரப்புக்களும் ஒருபோதும் இணையப்போவதே இல்லை.

* கேள்வி:- அப்படியென்றால் உங்கள் கூட்டணியில் சுதந்திரக்கட்சியை இணைப்பீர்களா?

பதில்:- அவர்கள் எமது கூட்டணியில் பங்கேற்க முடியும். அரசாங்கத்தில் இணைந்திருந்த அவர்கள் ஐ.தே.கவுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்து பிரிந்து சென்றமை தவறு என்பதை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள்.

* கேள்வி:- ஜனாதிபதி மைத்திரி மீது மீண்டும் நம்பிக்கை கொள்ளமுடியுமென்று கருதுகின்றீர்களா?

பதில்:- அவர் எமது அணியிலிருந்தே ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். தற்போதும் புரிந்துணர்வுடன் உள்ளார். ஆகவே அவரையும் ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் இணைத்துகொள்ள முடியுமாகவிருந்தால் அதற்கும் தயாராகவே இருக்கின்றோம். ஜனாதிபதி மைத்திரியின் தலைமையில் ஆரம்பித்த போராட்ப் பயணத்தின் இரணடாவது அத்தியாயம் தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலாகும். ஆகவே அவர் அதிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

* கேள்வி:- தாங்கள் இன்னமும் ஜனாதிபதி, பிரதமருக்கு இடையில் இணைப்பு பாலமாக செயற்படுகின்றீர்களா?

பதில்:- ஆம், 2015இல் இருந்து அவ்வாறு தான் செயறபடுகின்றேன். அது தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எதிர்காலத்திலும் தொடரும்.

* கேள்வி:- இந்த முயற்சியினை முன்னெடுக்கும் உங்களுக்கு உள்ளக அழுத்தங்கள் காணப்படுகின்றனவா?

பதில்:- பலர் பல்வேறு நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். இருப்பினும் பிரதமர் ரணிலைப் பொறுத்தவரையில தனக்கு எதிராக எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அதிலிருந்து மீள்வதற்காகவோ அல்லது பதிலடி வழங்குவதற்காகவோ அரசியல் தீர்மானம் எடுக்கும் ஒரு நபராக அவர் என்றும் செயற்பட்டதில்லை. அரசியல் கொள்கை ரீதியான இலக்கினை அடைவதற்கு நன்மையளிக்குமா என்பதைக கருத்திற்கொண்டே அவர் தீர்மானங்களை மேற்கொள்கின்றார். ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து செயற்படுவது பற்றி நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். அதில் அவருக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்பதை உறுதியாக கூறுவேன்

* கேள்வி:- மத்தியில் ஆட்சியதிகாரத்தினைக்' கொண்டிருந்தாலும் உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியுற்ற அரசாங்கமாக உள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் இதன தாக்கம் இருக்கு மல்லவா?

பதில்:- அரசாங்கத்தில் இருப்பவர்களே அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்யும் போது எந்தவொரு சாதாரண பொதுமகனும் அதனை ஏற்றுக்கொள்வார் அல்லவா. அதனால் தான் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தது. இருப்பினும் தற்போது அந்த நிலைமைகளில் அதீத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என பதிலளித்தார். (ஐ)

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டம்; யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி அபார வெற்றி



இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் கடந்த 27 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக அணிக்கும் கொழும்பு கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான போட்டி கொழும்பு கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணித்தலைவர் துடுப்பாட்டத்தைத் தெரிவு தெய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி அபாரமான துடுப்பாட்டத்தை மேற்கொண்டது. ஐம்பது ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 402 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பில் கல்கோகன் 115, பிரசாத் 94, டனுஷாந் 55, மலிந்த 52, துவாரகசீலன் 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

403 என்ற கடின இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய கொழும்பு காண்பிய மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அணி 27.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இதன்மூலம் 284 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது யாழ். பல்கலைக்கழக அணி.

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக் கழக அணி சார்பில் ஜனந்தன், சனிந்து ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும் அபேந்திரன் 2, செந்தூரன், நிதர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டனர்.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் மூன்றாவது குழுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி பேராதேனியா பல்கலைக்கழக அணியுடன் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி மோதவுள்ளது. (க)

## "தீவகப்போர்" கிரிக்கெட் சுற்றுப்போட்டி அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி சம்பியன்



நெடுந்தீவு கிரிக்கெட் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தீவக போர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஐந்தாவது வருட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் நெடுந்தீவு ஏ அணியும் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பிலிப்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து வழங்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெடுந்தீவு ஏ அணி 9.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.(க)

## வளர்மதி விளையாட்டுக் கழக வெற்றிக்கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்தி அணி



கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கைதடி மத்தி கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது.

5 செற்கள் கொண்ட போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இருப்பினும் ஆவரங்கால் மத்தி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.(க-60)







**அரியாலை திருமகள் சனசமூக நிலைய 67ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முன்னோடி நிகழ்வாக முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவும் இரவு கலை நிகழ்வுகளும் கடந்த 27 ஆம் திகதி நிலையத் தலைவர் வீ.ஜெகன் தலைமையில் நடைபெற்றது. (க)**

### அரியாலை சரஸ்வதி ச.ச.நிலைய நூற்றாண்டு விழா

## அரச உத்தியோகத்தருக்கிடையிலான பூப்பந்தாட்டம் சம்பியனாகியது யாழ். மாவட்ட செயலக அணி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான பூப்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இறுதியில் யாழ்.போதனா வைத்தியசாலை அணியினை 3:0 ரீதியில் வீழ்த்தி சம்பியனாகியது யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணி. இரண்டாம் இடத்தினை யாழ்.போதனா வைத்தியசாலை அணியும், மூன்றாம் இடத்தினை யாழ்.ஆசிரிய தெரிவு அணியும் பெற்றுக்கொண்டன. (க)

## மாணவன்...

மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மகாதேவன் புஸ்பன் (வயது-19) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## தம்பசிட்டியில்...

குடும்பப் பெண்ணின் மரணம் தற்கொலை என பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவிப்பதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை தம்பசிட்டி, கதிரவேற்பிள்ளை வீதியைச் சேர்ந்த ஜெகநாதகுரு கிருபாலினி (வயது-35) என்பவர் தமது வீட்டில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது கைகள் கயிறு ஒன்றினால் பின்புறமாக கட்டப்பட்டும், கழுத்து பஞ்சாபி சோலினால் இறுக்கி சுற்றப்பட்டும் வாயிலிருந்து நுரை வெளியேறிய நிலையிலும் சடலமாக மீட்கப்பட்டார்.

இவருடைய மரணம் கொலை எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனை அறிக்கை தற்கொலை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

## பொது அமைப்பு...

10ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அனைத்துப் பொது அமைப்புகள், மாணவர் அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், தொழிற்சங்கங்கள், விவசாய, கடற்றொழில் அமைப்புகள், மாதர் சங்கங்கள் உள்ளிட்ட சமூக அமைப்புகள் என்பவற்றின் பிரதிநிதிகளுடன் தமிழ் மக்கள் பேரவை சந்திக்கவுள் ளது.

யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் அனைத்துப் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுள்ளது. (ம)

## திருக்கேதீஸ்வர...

இணைச் செயலாளர் எஸ். இராமகிருஷ்ணன் தலைமையில் கேதீஸ்வரத்தின் சம்பந்தர்மடத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த சிவராத்திரி தினத்துக்கு முதல் நாள் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அலங்கார வளைவு கத்தோலிக்க மக்கள் சிலரால் பிடுங்கி எறியப்பட்டது தொடர்பான வழக்கில் இரு தரப்பினரும் பேசி உடன்பாட்டுக்கு வருமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் மன்னார் பிரதேச சபை வழங்கிய சந்தியில் இருந்து 85 அடி தூரத்தில் அமைப்பது தான் சிறந்தது.

அப்போதுதான் முன்பு போல் கத்தோலிக்க மக்களுக்கும் சைவ மக்களுக்கும் உண்மையான புரிந்துணர்வு நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதை நம்ப முடியும் என்று ஒருமித்த குரலாக தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## நீரில் மூழ்கி...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவிட்சர்லாந்து நாட்டின் சொலதூன் மாநிலத்தில் உள்ள அகதிகள் முகாமில் வசித்துவரும் தமிழ் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட சயந்தன் எனப்படும் இளைஞன் இரண்டு வருடங்களாக சுவிஸ் நாட்டில் அகதி தஞ்சம் கோரிய நிலையில் தற்காலிக குடியுரிமை பெற்று வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நண்பர்களுடன் அருகில் இருந்த நீர்த்தேக்கம் ஒன்றில் கடந்த இரு நாட்களுக்கு முன் நீராட சென்ற வேளையில் நீருக்குள் மூழ்கி மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் அறிந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி வருவதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## மாகாண சபைத்...

வினவ உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகி றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சட்டரீதியான சிக்கல்களுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முறைமை தொடர்பில் உயர்நீதிமன்றின் கருத்தை ஜனாதிபதி அறியவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடிய நிலைமை தற்போதும் உள்ளதாக குறிப்பிட்டார்.

நீதிமன்ற உத்தரவு, எல்லை நிர்ணயத்தை வர்த்தமானியில் அறிவித்தல் அல்லது சட்டவாக்க சபையினால் சட்டத்தை நிறைவேற்றுதல் என்பனவற்றின் ஊடாக மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

செப்ரெம்பர் மாதம் நிறைவடைவதற்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இவ்வாறு நடத்துவதானது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தடையாக அமையாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டார். (ம-3)

## இலங்கையின்...

னெடுக்கக் கூடும்.

கடந்த தேர்தலை விட வெளிநாடுகளின் தலையீடு குறைவாக இருக்கும் என நினைக்கின்றேன். எமது நாட்டின் அரசியல் மற்றும் உள்விவகாரங்களில் தலையிட சர்வதேசத்துக்கு உரிமையில்லை. இப்படியான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாம் என அந்நாடுகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டு மக்கள் தாம் விரும்பியவரை தெரிவு செய்ய இடமளிக்கப்பட வேண்டும். எந்த நாடும் எமக்கு ஒன்றுதான். நாங்கள் அனைத்து நாடுகளிடம் நட்புறவாக செயற்பட்டு வருகின்றோம் என அவர் தெரிவித்தார். (ம-3)

## நாட்டின் அபிவிரு..

பான்மையான ஆதரவு வழங்கப்படுமாயின் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பலமடங்காக அதிகரிக்க முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் 3 இல் 2 பெரும்பான்மை அதிகாரம் இருந்தும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு முடியாமற்போன ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் ஆட்சியைக் கோருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அற்ற சமகால அரசாங்கம் கடந்த 4 வருட காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்திக்காக பாரிய பொறுப்புக்களை நிறைவேற்ற இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

எம்பிலிபிட்டிய பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “சமகால அரசாங்கம் பல சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கிப் பயணிக்கின்றது.

பெரும்பான்மை பலத்தை கொண்டிராத தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொது மக்களுக்காக பாரிய சேவைகளை நிறைவேற்றியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் மக்களால் பெரும்பான்மையான ஆதரவு வழங்கப்படுமாயின் நாட்டை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும்.

வறட்சி, வெள்ளம், பிரதேச சபைத் தேர்தல், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் போன்ற அனைத்து சவால்களையும் நாம் எதிர்கொண்டோம். இதனால் எமது அரசாங்கம் வீழ்ச்சியடையும் என்று பொரும்பாலானோர் நினைத்தனர்.

இந்த அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்கின்றோம்" என அவர் தெரிவித்தார். (ம-3)

## நெல்லியடியில்...

படையினர் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நெல்லியடி நகரை அண்டிய பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக நெல்லியடியில் உள்ள அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குடத்தனையில் உள்ள விசேட அதிரடிப் படையினர் நெல்லியடி நகரை அண்டிய பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தனர்.

இதன்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இருவரை விசாரணை செய்தபோது முரண்பட்ட தகவலை வழங்கியதால் அவர்களை சோதனையிட்ட போது கஞ்சா மீட்கப்பட்டது என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ம-60)

## அரச ஒத்தோடி...

மீதுதொடுக்கப்பட்ட இன அழிப்பு யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் நீதியானதும் நியாயமானதுமான கோரிக்கைகளுக்கான தீர்வுத் திட்டத்தினை முன்வைப்பதிலும் அதனை அமுல்படுத்துவதிலும் கரிசனை காட்டாது இலங்கையின் ஆளும் அதிகார வர்க்கம் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்ற செயற்பாடு அவர்களின் உள்ளக்கிடக்கையை தெட்டத்தெளிவாக வெளிக்கொண்டு வருகின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்கவில்லை. நிலவுரிமை மற்றும் மரபுரிமைப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை பற்றி எந்த உத்தரவாதமும் கிடைக்கவில்லை.

கன்னியாவில் ஒரு இந்து மதப் பெரியார் மீது வேண்டுமென்றே ஒரு சிங்கள பௌத்தர் சுடு தேநீரை அவர் முகத்தில் வீசியுள்ளார். "சமாதானமாகப் போங்கள்" என்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொலிஸாரும். ஒரு புத்த பிக்கு மீது தமிழர் ஒருவர் சுடுநீர் வீசியிருந்தாரானால் அவரைச் "சமாதானமாகப் போ" என்பார்களா? குறைந்தது பகிரங்கமாக எமது சுவாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால்தான் சுவாமி அவர்கள் சமாதானத்தை நாட வேண்டும். இவ்வாறானசம்பவங்கள் ஏராளம். கண்ணீர் களமாக காட்சியளிக்கின்றது எமது நிலம்.

ஒருமாபெரும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இன நீதிமறுக்கப்பட்டுள்ள எமதுமக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் நிபந்தனைகளேதுமற்ற ஆதரவினை ஆதாரமாகக் கொண்டு சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து. இலங்கை தன்னை விடுவித்துக் கொண்டுள்ளதோடு திட்டமிட்டே வேண்டுமென்று தமிழர்களின் பூர்வீக அடையாளங்களைஅழித்து தமிழர் மண்ணில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதிலும் முனைப்போடு எந்தவித பதற்றமும் இல்லாது செயற்பட்டு வருகின்றது.

எமதுமக்கள் தமது விரல்களாலேயே தங்களது கண்களைக் குத்திக் கொண்டுள்ளதை இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியுள்ளார்கள். எமது மக்களின் உள உணர்வுகளை உதாசீனம் செய்து தொடர்ந்தும் அரச இயந்திரங்களின் ஒத்தோடிகளாக இருக்கின்ற இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை நான் வேதனையுடன் இங்கு தெரிவிக்க வேண்டி இருப்பதையிட்டு கவலையடைகின்றேன். எமக்கு இப்பொழுது பாராளுமன்றத்தில் இருக்கும் பலத்தை வைத்து பலதையும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றிருக்கலாம். இவ்வாறான பலம் இனி எமக்குக் கிடைக்குமோ தெரியாது.

அவ்வாறுதமதுபலத்தைப் பாவியாது இருந்தமை எப்பேற்பட்ட குற்றம் என்பதை இப்பொழுது உணர்ந்துள்ளனர் கூட்டமைப்பினர். அதனால்தான் தாம் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக இப்போது கூறத் தொடங்கியுள்ளனர். கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்வாறு கூறிமக்களின் அனுதாபத்தைப் பெறலாம் என்றுயோசிக்கின்றார்கள் போலும். ஆனால் இதுகாறும் இருந்தபலத்தை எமதுமக்களின் நன்மைக்காகப் பாவியாது விட்டமை எவ்வளவு பெரியதவறுள்ளதை இப்போது உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன். ஆகவேதான் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக கட்சி பேதங்கள் இன்றி ஒரு மாபெரும் மாற்றுஅணியினைக் கட்டியெழுப்ப வேண்டியகாலத்தின் கட்டாயம் இன்று எழுந்திருக்கின்றது. அவ்வாறானதொரு அரசியல் கூட்டிணைவை விட எம்மை காக்கப் போவது வேறொன்றுமில்லை. இவ்வாறு இணைவதானால் கட்சிகள் சுயநலம் களைவது அவசியம். கட்சிகளின் சுயநல சிந்தனைகள் தமிழ் மக்களின் விடிவுக்கு இடம்கொடுக்க மாட்டா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். (ம-3)

## சித்திரத் தேர்...

இடம்பெற்றது.

தொன்மையும் அற்புதங்களும் நிறைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது. நாளை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் 29 வருடங்களின் பின்னர் புதிய சித்திரத் தேர் வடிவமைக்கப்பட்டு தேர் வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது.

முன்பிருந்த முக உத்தரத் தேரை விடவும் பெரியதாகவும் 45 அடி உயரம் கொண்டதும், சிறப்பான சிற்ப வடிவமைப்புக்களையும் கொண்டதாக இந்த தேர் அமைக்கப்பட்டுள்ளது.

சிறப்பு மிக்க பஞ்சரதங்களின் நடுநாயகமாக விளங்கும் சண்முகப்பெருமானின் முக உத்தர திருத்தேர் 1990ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது அழிவடைந்திருந்தது.

மேலும் இதன்போது ஏனைய நான்கு தேர்கள், சப்பை இரதம், திருமஞ்ச இரதம், கைலாய வாகனம் என்பவையும் முற்று முழுதாக அழிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பிரேமதாச வழி...

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தந்தையின் வழியிலேயே தானும் பயணிக்கவுள்ளதாக சஜித் பிரேமதாச கூறி வருகின்றார். அவ்வாறானால் 04

தன நிதானய
திகதி 2019-07-28
சீட்டிழுப்பு இலக்கம் 180
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 28 37 49 54
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 2192
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 23 41 51 72
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/07/28
சீட்டிழுப்பு இலக்கம் 0577
லக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 20 44 51 66

மஹஜன சம்பத
திகதி 2019/07/28
சீட்டிழுப்பு இலக்கம் 3969
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 4 9 4 4 7
தேசிய லொத்தர் சபை

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(C-7109)

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்
3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(C-7107)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

(9717)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எழுதியவர்கள் விரும்பத்தக்கது



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்** **V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தூர்

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- சம்பளம் -15'000/- (C-7017)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



விசேட விலைக்கழிவு

(C-7113)

CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

(9737)
தொடர்பு: ராஜ் - 077 679 6623

**அரைக்கும் ஆலை வாடகைக்கு உண்டு**

முகவரி :
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
(சந்தைக்கு அருகில்)

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல :-
076 910 3162
(9741)

**British College of Higher Studies**
**NEW BATCHES STARTS!!!**

IELTS (Academic/General)
IELTS Life skills (A1, B1 exams)
Diploma in English
Spoken English
Spoken Sinhala

**Canadian student visa**

**15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.**
**021 222 4550, 076 138 0212**
(C-7134)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

021 222 3536
(C-7124)

**திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்**

**இந்தியன் செலக்ஷனின்**



**ஆடி மாத ஆடைத் திருவிழா**



காஞ்சிபுரம் பட்டுப்புடைவைகள்
திருமணப்பட்டுப்புடைவைகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
மொடர்ன் டொப்
டெனிம் டொப்
மொடர்ன் சூட்
பார்ட்டி புரொக்
சேட், T-சேட், ரவுசர்

**புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்**



இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 29.07.2019 இன்று மட்டும்

**இந்தியன் செலக்ஷன்** அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-7133)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.